மாதவி

40928
Paganeri

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

மாதவி

ஆசிரியர்:

சரத் சந்திர சட்டர்ஜி

மொழிபெயர்ப்பாசிரியர்:

எம். வி. வெங்கடராமன்

நவயுகப்பிரசுராலயம்

ஜி: டி. சென்னை

[விலை 12 அணா

A. 4890

மா த வி

குடும்பப் பெண்கள் விளக்கு ஏற்றும் போது எண்ணெயும் திரியும் போடுவது போல் விளக்கில் ஒரு தீக்குச்சியையும் போட்டு வைப்பார்கள். விளக்கு கொஞ்சம் மங்கும் சமயம் அந்தச் சின்னக் குச்சி ரொம்ப உபயோகப்படும் — அதைக் கொண்டுதான் தீபத்தைத் தூண்டிவிட வேண்டும். அது இல்லாவிட்டால் எண்ணெயும் திரியும் இருந்தும் இல்லாதவை போலத்தான்.

சுரேந்திர நாதனின் சுபாவமும் ஏறக்குறைய அதை யொத்ததுதான். அவனுக்குப் பலம், புத்தி, தன்னம்பிக்கை எல்லாம் இருக்கின்றன; ஆனல் தனியே அவனல் ஒரு வேலையும் முழுசாகச் செய்ய முடியாது; எடுத்துக்கொண்ட வேலையை ஆரம்பத்தில் கொஞ்சம் விறுவிறுப்புடன் செய்பவன் போல் காணப்படுவான். ஆனல், பாக்கி வேலையைச் செய்யாமல் சோம்பி விட்டுவிடுவான். அந்தச் சமயத்தில் அவனைத் தூண்டிவிடுவதற்கு ஆள் தேவை.

அவனுடைய தகப்பனருக்கு மேற்கே வெகு தூரத்தில் வக்கீல் வேலை. அவருக்கும் வங்காளத்துக்கும் அதிக சம்பந்தம் கிடையாது. அங்கேதான் சுரேந்திரன் இருபதாவது வயதில் எம். ஏ. பாஸ் செய்தான்; பாஸ் செய்ததற்கு அவனுடைய குணங்களே காரணம் என்று சொல்லிவிட முடியாது. அவனு

டைய மாற்ருந் தாய்க்கு அந்தப் பெருமையில் பங்கு உண்டு. அவள் எப்போதும் அவனையே சுற்றிக் கொண்டிருப்பாள்; அவள் செய்யும் தடபுடலில், சில சமயம் அவனுக்கு, ‘நான், நான்தானு? என் சித்தியா?’ என்று கூடச் சந்தேகம் உண்டாகிவிடும். சுரேந்திரன் என்கிற ஜீவனே உலகில் இல்லை போலவும், மாற்ருந் தாயின் விருப்பமே மனித உருவெடுத்து எல்லா வேலை வெட்டிகளையும், தூங்குவது, உட்காருவது, எழுதுவது, படிப்பது, பரீட்சை பாஸ் செய்வது எல்லாவற்றையும் செய்கிறது போலவும் அவள் அவனைக் கண்காணித்து வந்தாள். அவள் தன் சந்தானத்தைப்பற்றி அதிகக் கவலைப்படுவதில்லை; ஆனுல் சுரேந்திரனிடம் காட்டும் அக்கறையைச் சொல்லி முடியாது. அவன் தும்மினுனு, இருமினுனு என்கிற சின்ன விஷயங்கள்கூட அவளுக்கு எட்டிவிடும். அவள் தன் கடமையை நிறைவேற்றிக்கொண் டிருந்தது என்னவோ வாஸ்தவம்; ஆனுல் அவளுடைய ஆட்சிக்கு அடங்கியிருந்த சுரேந்திரன், ஏதோ எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டாலும், சொந்தமாக ஒரு வேலையும் அவனுக்குச் செய்யத் தெரியாது; செய்ய முடியும் என்கிற நம்பிக்கையும் அவனுக்குக் கிடையாது. இந்தச் சமயத்தில் இந்தச் சாமான்தான் தேவையாக இருக்கும் என்றுகூட அவன் அறியான். பல சமயங்களில் தனக்குப் பசிக்கிறதா, தூக்கம் வருகிறதா என்றுகூட அவனுக்குத் தெரியாமல் போய்விடும்; எல்லாவற்றையும் பிறர் ஒத்தாசை கொண்டு தான் அவன் அறியவேண்டும், செய்யவேண்டும். அவனுக்கு விவரம் தெரிந்து பதினைந்து வருஷம் ஆகிறது. அந்த நீண்ட காலத்தை அவன் மாற்றன்னையை

அவலம்பித்தே கழித்துவிட்டான். அவனுக்காக அவள் பல வேலைகள் செய்துகொடுப்பாள். நாளின் இருபத்து நாலு மணி நேரத்தில் இருபத்திரண்டு மணி நேரம் திட்டுதல், கோபித்துக்கொள்ளல், வேலைகளில் கவனம் செலுத்துதல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு, அவள் அவனுக்காகப் பண்ணும் வேலைகள் பல. பரீட்சைக் காலத்தில் அவன் படும் பாடு சொல்லி முடியாது ; பரீட்சைக்கு ஒரு வருஷம் முன்னதாகவே அவன் எங்கே தூங்கிவிடப் போகிருனே என்று அவளும் தூங்காமலே அவனேடு விழித்துக் கொண்டிருப்பாள். சக்களத்தி பிள்ளைக்காக யார் தான் இவ்வளவு சிரமப்படுகிருர்கள் ? அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோருமே அவளை ஒரு முகமாகப் புகழ்ந்துகொண் டிருந்தார்கள்.

சுரேந்திரனுக்காக அவள் செய்யும் முயற்சிகளில் ஒரு குறையும் காண முடியாது. வசவு மழைக்கு அப்புறம் அவனுடைய கண்களும் மூஞ்சியும் சிவந்து விடும். அதை ஜுரம் வருவதற்குப் பூர்வ லக்ஷணம் என்று எண்ணி உடனே அவள் மூன்று நாள் அவனைப் பத்தியமாகச் சாப்பிடச் செய்வாள். அவனுடைய மன உயர்விலும் கல்வியிலும் அவளுக்குப் பரம சிரத்தை. சுரேந்திரன் ஒரு நாள் சுத்தமான உடையோ, புது மோஸ்தர் உடையோ அணிந்துகொண்டால் போதும் : 'சரி, ஐயாவுக்கு ஷோக் பிறந்திருக்கிறது ; மைனராக இருக்கப் பார்க்கிருர் !' என்று அவளுக்குத் தோன்றிவிடும். முடிவு, மூன்று நாள் வரை சலவை செய்த வேஷ்டி அவனுக்குக் கிடைக்காது.

இப்படியே சுரேந்திரனுடைய காலம் கழிந்து கொண்டிருந்தது. சில சமயம் இந்த அன்பு நிறைந்த

அதிகாரத்தில் அவனுக்குக் கசப்புத் தட்டுவது உண்டு. 'போதும் இந்த ஜன்மம்' என்றுகூடத் தோன்றி விடும். சில சமயம் எல்லோருடைய வாழ்க்கையும் ஆரம்பத்தில் இப்படித்தான் என்று தன்னைத் தேற்றிக்கொள்வான். ஆனால் சுற்றியிருப்பவர்கள் அவனைக் கிளறி, அவன் நினைவு தவறு என்று தோன்றச் செய்வார்கள்.

ஒரு நாள் அப்படியே நடந்தும் விட்டது. தன் நினைவு தப்பு என்று அவனுக்குப் புலப்பட்டு விட்டது.

அன்று அவனுடைய நண்பன் ஒருவன் வந்தான். 'உன்னைப் போன்ற புத்திசாலிகள் சீமைக்குப் போனால் வருங் காலத்தில் ரொம்ப முன்னுக்கு வரலாம். தேசத்துக்கு வேண்டிய நன்மைகளும் செய்யலாம்' என்று சொல்லி அவனைத் தூக்கி வைத்துப் பேசிவிட்டு நண்பன் போய்விட்டான். சுரேந்திரனுக்கும் அவன் சொன்னது சரி என்றே பட்டது. காட்டுப் பறவையைவிட கூட்டுப் பறவைதான் அதிகமாகச் சிறகடித்துக்கொள்ளும். விடுதலை விடுதலை என்று அவன் கற்பனை ஒளி கண்டான். அவனுடைய அடிமை உயிர் அதற்காக ஒரேயடியாகக் குதிக்க ஆரம்பித்தது.

தகப்பனாரிடம் போனான் ; தான் எப்படியாவது சீமைக்குப் போயாகவேண்டும் என்று தெரிவித்தான்; அதனால் ரொம்பவும் முன்னுக்கு வரலாம் என்றும் சொல்லி வைத்தான். அப்பா, 'பார்க்கிறேன்' என்று பதில் அளித்தார். ஆனால் வீட்டு எஜமானிக்கு அவனை அக்கரைக்கு அனுப்ப இஷ்டமில்லை. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் மத்தியில் சூறுவளி போல் அவள்

புகுந்தாள்; அவளுடைய உரத்த சிரிப்பைக் கேட்டு இரண்டு ஆண்பிள்ளைகளும் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள்.

'சரி, சுரேந்திரன் சீமைக்குப் போக வேணுமா? நானும் அவன் கூடவே போகிறேன்! அவனைப் பார்த்துக்கொள்ள வேணும் அல்லவா? எந்த வேளையில் எப்படித் துணி கட்டிக்கொள்ள வேணும், என்ன சாப்பிட வேணும் என்று தெரியாதவன் சீமைக்குப் போக வேணுமாம் — சீமைக்கு! நம்ம குதிரையை சீமைக்கு அனுப்பினால் கூட ஏதோ தப்பித்துக்கொள்ளும். பசிக்கிறது — சாப்பிடணும், தூக்கம் வருது— தூங்கணும் என்றாவது அதற்குத் தெரியும் அல்லவா? ஆனால் நம்ம சுரேந்திர நாதனுக்கு அதுகூடத் தெரியாதே!' மறுபடியும் அவள் உரத்துச் சிரித்தாள்.

பெருமிதமான அந்தச் சிரிப்பைக் கேட்டு இருவரும் வெட்கிப் போய்விட்டார்கள். சுரேந்திரனுக்கு அவளை எதிர்த்துப் பேசத் தைரியமில்லை. பேச முடியவில்லை. மறுக்க முடியாத உண்மை அல்லவா? சீமை எட்டாப் பழம் என்று அவன் தீர்மானித்து விட்டான். அவனுடைய தோழன் அதைக் கேட்டு மிகவும் வருத்தப்பட்டான். ஆனால் சீமைக்குப் போக வேறு உபாயம் இருக்கிறதா இல்லையா என்று அவன் கூறவில்லை. ஆனால் கடைசியில், 'இம்மாதிரி அடிமையாக இருப்பதைவிடப் பிச்சை வாங்கி வாழலாம்' என்று அவன் ஒரு போடு போட்டான்.

வீட்டுக்கு வந்த சுரேந்திரனுக்கு அதே யோசனை. நண்பன் சொன்னது சரிதான் என்று மூளையும் சொல்லிற்று. ஆம், பிச்சை வாங்கியாவது வாழலாம்! ஆனால் கௌரவத்துடன் எம். ஏ. பாஸ் செய்த

அவன் சோற்றுக்குத் திண்டாட வேண்டிய பிரமேயமே ஏற்படாது. எல்லோரும் சீமைக்குப் போக முடியாது என்பது என்னவோ வாஸ்தவம்; ஆனல் எவன்தான் அடைபட்டு வாழச் சம்மதிப்பான்?

ஒரு நாள் கம்பீரமான இரவு வேளையில் அவன் ஸ்டேஷனுக்குப் போனன். கல்கத்தாவுக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தான். கொஞ்ச நாள் தான் வெளியே போவதாகவும், தன்னை வீணகத் தேட வேண்டாம் என்றும், இருக்குமிடம் தெரிந்தாலும் தன்னை வீடு திரும்பச் செய்ய முடியாது என்றும் அவன் அப்பாவுக்கு ஒரு தபால் எழுதிப் போட்டான்.

அப்பா அம்மாவுக்குக் கடிதத்தைக் காட்டிக் கூறினர்: ' சுரேந்திரனுக்கு வயது வந்துவிட்டது; எழுதப் படிக்கத் தெரிந்துவிட்டது. சிறகு முளைத்த பிறகு ஓடாமல், வேறே எப்போது ஓடுவான்?'

ஆனலும் அவர் அவனைத் தேடினர். கல்கத்தாவில் உள்ள தெரிந்தவர்களுக்கு எல்லாம் கடுதாசி எழுதினர். ஆனல் சுரேந்திரனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை.

இரண்டாவது அத்தியாயம்

கல்கத்தாவிலுள்ள ஜனங்களின் ஆரவாரத்தைக் கேட்டு சுரேந்திரன் திடுக்கிட்டுவிட்டான். அங்கே அவனை வைகிறவர்களோ திட்டுகிறவர்களோ யாரு மில்லை. நாள் முழுதும் கண்காணித்துக்கொண் டிருக் கிறவர்களும் இல்லை. தொண்டை உலர்ந்தாலும் சரி, வயிறு காய்ந்தாலும் சரி, ஏன் என்று கேட்பார் இல்லை; தன்னைத் தானே கவனித்துக்கொள்ள வேண்டும். பிச்சை கிடைக்கும்; கருணை கிடைக்கும்; புகலிட மும் கிடைக்கும்; ஆனால் எல்லாவற்றுக்கும் சொந்த முயற்சி வேண்டும். ஒருவன் வேலையில் இன்னொரு வன் தானாகக் குறுக்கிட மாட்டான்.

எங்கேயாவது போக வேணும் என்றால் அவனா கவே போக வேண்டும். இங்கே தூக்கம், பசி எல்லாவற்றின் மாதிரியே வேறு!

அவன் வீட்டை விட்டு வந்து பல நாட்கள் ஆகி விட்டன. தெருத் தெருவாக அலைந்து உடலும் நலிந்துவிட்டது. கையில் இருந்த பணமும் தீர்ந்து விட்டது. துணியெல்லாம் கந்தல். ராத்திரியில் படுக்க இடமும் கிடையாது! அவன் கண்களில் நீர் நிறைந்தது. வீட்டுக்குக் கடிதம் எழுதலாம் என் றாலோ வெட்கமாக இருக்கிறது; அதுவும் சித்தி யின் 'அன்பால் கடூரமான முகம்' ஞாபகம் வந்ததும் வீடு போகவேண்டும் என்ற எண்ணமே ஒழிந்து விடும்; ஏன், 'அங்கே நாம் இருந்தோம்' என்று நினைத்துப் பார்க்கக்கூட அவனுக்குப் பயம்!

ஒரு நாள் தன்னைப் போன்ற ஒரு தரித்திரனைச் சந்தித்துக் கேட்டான்: ‘ஏன் தம்பி, நீங்கள் எல்லாம் இங்கே எப்படிச் சாப்பிடுகிறீர்கள்?’

அந்த மனுஷன் முட்டாள் போலிருக்கிறது; இல்லாவிட்டால் அவன் சுரேந்திரனைக் கேலி பண்ணி யிருப்பான்.

‘வேலை செய்து சம்பாதிக்கிறோம், சாப்பிடுகிறோம். கல்கத்தாவிலே அன்றாட வேலைக்கு என்ன குறைச் சல்?’ என்று அவன் பதில் அளித்தான்.

‘எனக்கு ஏதாவது வேலை வாங்கித் தருவாயா?

‘உனக்கு என்ன வேலை தெரியும்?’

சுரேந்திரனுக்கு ஒரு வேலையும் தெரியாதாகை யால் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தான்.

‘நீ பணக்கார வீட்டுப் பையனா?’

சுரேந்திரன் தலையை ஆட்டினான்.

‘அப்படியானால் எழுதப் படிக்க ஏன் கற்க வில்லை?’

‘தெரியும்!’

அந்த ஆசாமி கொஞ்சம் யோசித்துக் கூறினான்: ‘அப்படியானால் இந்தப் பெரிய வீட்டிற்குப் போ. அதிலே ஒரு பெரிய ஜமீன்தார் இருக்கிறார். ஏதாவது வேலை தருவார்.’

அவன் போனதும், சுரேந்திரன் அந்த வீட்டு வாச லருகில் போய், கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான். பிறகு கொஞ்சம் பின் நகர்ந்தான். மறுபடியும் கொஞ்சம் முன்னே சென்றான். அப்புறம் பின்னால் போனான். அன்று ஒன்றும் நடக்கவில்லை. மறுநாளும் அப்படியே போய்விட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு துணிந்து உள்ளே சென்றான்.

எதிரில் ஒரு வேலையாள் நின்றுகொண்டிருந்தான். அவன், 'என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

'ஐயாவை—'

'ஐயா வீட்டில் இல்லை!'

சுரேந்திரனுடைய முகம் மலர்ந்தது. ஒரு பெரிய கஷ்டம் தொலைந்தது. ஐயா வீட்டில் இல்லை. வேலை இல்லை. ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது என்று மூக்கால் அழ வேண்டியதில்லை என்பதுதான் அவனுடைய ஆனந்தத்திற்குக் காரணம். இரு மடங்கு உற்சாகத்துடன் அவன் கடைக்குப் போய் வயிறு நிறையச் சாப்பிட்டான். கொஞ்ச நேரம் சந்தோஷமாகச் சுற்றிக்கொண்டிருந்தான். மனத்திற்குள் மறு நாள் எப்படிப் பேசிக் காரியத்தைச் சாதித்துக்கொள்வது என்று நன்றாக யோசித்து வைத்துக்கொண்டான்.

ஆனால் மறுநாள் அந்த உற்சாகம் மறைந்து போய்விட்டது. அந்த வீட்டை நெருங்க நெருங்கத் திரும்பிவிடலாம் என்று தோன்ற ஆரம்பித்தது. கடைசியில் வாசலருகில் சென்ற சமயம் உற்சாகமே இல்லை. அவனுடைய கால்கள் உள்ளே போகவே மறுத்தன. 'நமக்காகத்தான் இங்கே வந்திருக்கிறோம்' என்ற நினைவுகூட அவனுக்கில்லை; யாரோ வலுவாகக் கட்டாயப்படுத்தி இழுத்துக்கொண்டு போவது போல் அவனுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. ஆனால் வாசலருகில் நின்று எவ்வளவு நேரம் யோசிப்பது? ஆகையால் உள்ளே போனான். மறுபடியும் அதே வேலையாளைக் கண்டான்.

'ஐயா வீட்டில் இருக்கிறார்; நீங்கள் பார்க்க வேணுமா?'

'ஆம்!'

'அப்படியானுல் வாருங்கள்!'

ஆனுல் சுரேந்திரனுக்கு தர்மசங்கட மாகிவிட்டது. ஜமீன்தார் வீடு ரொம்பப் பெரிது. பெரிய மனுஷர்களுக்கு ஏற்ற அலங்காரங்கள், பளிங்குப் படிகள், ஒவ்வோர் அறையிலும் பூச்சட்டிகள், பெரிய பெரிய கண்ணுடிகள், போட்டோக்கள். ஆனுல் இவையெல்லாம் அவனுக்குப் பெரிதாகப் படவில்லை. அவனுடைய தகப்பனுர் குடிசையிலா வாழ்ந்தார்? அவனும் பெரிய வீட்டுப் பிள்ளைதானே?

'நாம் பார்க்கப்போகும் ஆள் என்ன கேள்வி கேட்பார், நாம் எப்படிப் பதிலளிப்பது?' என்ற ஒரே யோசனைதான் அவனுக்கு. ஆனுல் சரியாக யோசித்துக்கொள்ள முடியவில்லை. எதிரில் வீட்டு எஜமானர் உட்கார்ந்திருந்தார்.

'என்ன வேலையாக வந்தாய்?' என்று அவர் கேட்டார்.

மூன்று நாளாக சுரேந்திரனுக்கும் அந்த யோசனைதான். ஆனுல் இப்போது எல்லாம் மறந்து போய்விட்டது.

'நான்—நான்—' என்று தடுமாறினுன்.

விரஜநாத் லாஹிடீ வங்காளத்தில் பூர்வமான ஜமீன்தார். அவருடைய இரண்டொரு தலைமயிரும் நரைத்துவிட்டது; அகாலத்தில் அல்ல, சரியான காலத்தில்தான். பெரிய மனுஷர். ஆகையால் அவருக்கு சுரேந்திரனின் நிலைமை உடனே புரிந்துவிட்டது.

'என்ன வேண்டும்?'

'எனக்கு ஏதாவது—'

'என்ன?'

'வேலே—'

விரஜராஜர் மெல்லச் சிரித்துக்கொண்டே, 'நான் வேலே கொடுக்க முடியும் என்று உன்னிடம் யார் சொன்னூர்கள்?' என்று கேட்டார்.

'தெருவிலே ஒரு ஆளேக் கண்டேன். அவனிடம் கேட்டேன். அவன் உங்களே—'

'சரி, உன்னுடைய வீடு எங்கே?'

'மேற்கே—'

'அங்கே உனக்கு யார் இருக்கிருர்கள்?'

சுரேந்திரன் விஷயத்தைச் சொன்னுன்.

'உன்னுடைய தகப்பனுருக்கு என்ன வேலே?'

இக்கட்டான நிலேமை அவனுக்கு ஒரு புதுப் பாடம் கற்பித்திருந்தது. தயக்கத்துடன், 'சாதாரண வேலேதான்,' என்ருன்.

'அவரால் முடியவில்லே என்று நீயும் சம்பாதிக்கப் பார்க்கிருயா?'

'ஆமாம்—'

'இங்கு எங்கே இருக்கிருய்?'

'எங்கேயும் இல்லே; கண்ட இடத்தில்—'

விரஜ பாபுவுக்கு இரக்கம் வந்துவிட்டது. சுரேந்திரனே அருகில் உட்கார வைத்துக்கொண்டு பின் வருமாறு சொன்னுர்: 'நீ இன்னும் சிறு குழந்தை. இந்த வயசிலே வீட்டை விட்டு வர நேர்ந்தது என்று கேட்டால் வருத்தமாக இருக்கிறது. என்னுல் வேலேயொன்றும் கொடுக்க முடியாவிட்டாலும் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்—'

உடனே, 'சரி' என்று சொல்லிக்கொண்டே சுரேந்திரன் நடைகட்டினுன். விரஜ பாபு மறுபடியும் அவனேக் கூப்பிட்டார்.

'வேறே ஒன்றும் நீ கேட்கவேண்டியது இல்லையா?'

'ஒன்றும் இல்லை.'

'இதற்குள்ளே எல்லாம் ஆகிவிட்டதா? நான் உனக்காக என்ன ஏற்பாடு செய்வேன், எப்படிச் செய்வேன் என்றுகூடக் கேட்கவேண்டாமா?'

சுரேந்திரன் மலைத்து நின்றுவிட்டான். விரஜ பாபு சிரித்துக்கொண்டே, 'இப்போது எங்கே போகிறாய்?' என்றார்.

'எங்கேயாவது கடைக்கு—'

'அங்கே சாப்பிடுவாயா?'

'ஆம், தினம் அப்படித்தான்—'

'என்ன படித்திருக்கிறாய்?'

'ஏதோ கொஞ்சம்.'

'என் மகனுக்குச் சொல்லித்தர முடியுமா?'

'ஓ!' என்றான் சுரேந்திரன் சந்தோஷமடைந்து.

விரஜ பாபு மறுபடியும் சிரித்தார். வருத்தமும் வறுமையும் அவன் மூளையைக் கலக்கிவிட்டன என்று நினைத்துக்கொண்டார்; இல்லாவிட்டால் யாருக்கு என்ன சொல்லித்தர வேண்டியிருக்கும் என்று தெரிந்துகொள்ளாமலேயே ஒருவன் அதற்குச் சம்மதிப்பானா?

'அவன் பி. ஏ. படித்துக்கொண்டிருந்தாலோ?'

சுரேந்திரன் கொஞ்சம் கம்பீரமாகப் பதில் அளித்தான். 'அப்படியானால் இன்னும் சரிதான்—'

அதற்கு விரஜ பாபு ஒன்றும் சொல்லவில்லை. வேலைக்காரனைக் கூப்பிட்டு, 'பங்கூ! இவர் இருப்பதற்காக இடம் வசதி பண்ணிக் கொடு; ஸ்நானத்துக்கும் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்!' என்று கட்டளையிட்டார். பிறகு அவர் சுரேந்திரனிடம், 'சாயங்

காலத்திற்கு அப்புறம் மறுபடி உன்னைக் கூப்பிடு கிறேன். என் வீட்டிலேயே இரு. ஏதாவது வேலை கிடைக்கிறவரை சௌக்கியமாக இங்கேயே இருக்க லாம்—' என்று சொன்னார்.

மத்தியானம் சாப்பிடப் போன சமயம் அவர் தம் முடைய பெரிய பெண் மாதவியைக் கூப்பிட்டு, 'இன்றைக்கு ஓர் ஏழைக்கு வீட்டில் தங்க இடம் கொடுத்திருக்கிறேன்' என்று சொன்னார்.

'அது யார் அப்பா?'

'ஏழை; அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஏதோ எழுதப் படிக்கத் தெரியும் போல் இருக்கிறது. உன்னுடைய அண்ணவுக்கு பி. ஏ. பாடம் சொல்லித் தர முடியுமா என்று கேட்டேன்; முடியும் என்கிறான்! பி. ஏ. க்குச் சொல்லிக் கொடுக்க முடியும் என்கிறவன் உன் தங்கைக்குச் சொல்லித்தர முடியாதா? அவனை பிரமீளாவின் மாஸ்டராக வைக்கப் போகிறேன்—'

மாதவி அதற்குத் தடை ஒன்றும் சொல்லவில்லை.

மாலையானதும் விரஜ பாபு அவனைக் கூப்பிட்டு விஷயத்தைத் தெரிவித்தார். அடுத்த நாளிலிருந்தே அவன் பிரமீளாவுக்குப் பாடம் கற்பிக்கத் தொடங் கினான்.

பிரமீளாவுக்கு ஏழு வயது. அவள் ஆரம்பப் புஸ் தகம் படிக்கிறாள். தன் தமக்கை மாதவியினிடம் இங் கிலீஷ் முதல் புஸ்தகத்தில் 'தவளைக் கதை' வரை படித் திருக்கிறாள். காப்பி, புஸ்தகம், சிலேட், பென்ஸில், படம் எல்லாம் எடுத்துக்கொண்டு அவள் படிக்க வந்தாள்.

சுரேந்திரன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான்: 'Do not move — டூ நாட் மூவ் — அசையாதே—'

பிரமீளாவும் படிக்க ஆரம்பித்தாள், 'Do not move — டூ நாட் மூவ் — அசையாதே—'

பிறகு சுரேந்திரனுடைய மனது எங்கோ போய் விட்டது. சிலேட்டை எடுத்துப் பென்ஸிலால் ஏதோ கிறுக்க ஆரம்பித்தான். ஏதோ 'பிராப்ளங்' களை* (Problems) 'ஸால்வ்'† (Solve) செய்துகொண் டிருந்தது மனது. கடிகாரத்தில் ஏழு மணி ஆகி, எட் டாகி, ஒன்பது அடிக்க ஆரம்பித்தது. பிரமீளாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இப்படியும் அப்படியு மாகப் புரண்டு உட்கார்ந்துகொண் டிருந்தாள்; கொஞ்ச நேரம் புஸ்தகத்தின் படம் நிறைந்த பக்கங் களைப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்தாள்; கொஞ்ச நேரம் படுத்துக் கிடந்தாள். பாவம், புஸ்கத்தி லுள்ள தவளையின் உடம்பெல்லாம் மை அபிஷேகம் செய்தாள். 'Do not move — அசையாதே' என்று வாசிப்பதையும் நிறுத்தவில்லை.

'ஸார், நான் உள்ளே போகட்டுமா?'

'போ!'

இப்படியே அவனுடைய காலை நேரம் கழிந்து விடும். ஆனால் மத்தியானம் வேறு வேலைகள். விரஜ பாபு அவனுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சில பெரிய மனிதர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்திருந்தார். சுரேந்திரன் அந்தக் கடிதங்களைப் பையில் போட்டுக்கொண்டு வெளியே கிளம்பிவிடு வான். விசாரித்துக்கொண்டு அவர்களுடைய வீட் டெதிரில் போய் நிற்பான். வீடு எத்தனை அறைகள்,

---

* பிராப்ளம் - கணித சம்பந்தமான பிரச்னை.

† ஸால்வ் - விடுத்தல், விடைகாணுதல்.

இரண்டு மாடி வீடா, மூன்று மாடி வீடா, வீட்டிற்கு எதிரில் ஏதாவது விளக்குக் கம்பம் இருக்கிறதா என்று நன்ருகப் பார்த்து வைத்துக்கொள்வான். பொழுது சாய்வதற்கு முந்தியே வீட்டுக்குத் திரும்பி வந்து விடுவான்.

கல்கத்தாவுக்கு வந்த பின் அவன் சில புஸ்தகங்கள் வாங்கியிருந்தான். அவன் வீட்டிலிருந்து கையோடு கொண்டுவந்த சில புஸ்தகங்களும் இருந்தன. இப்பொழுது அவைகளைப் படித்துக் கொண்டிருப்பதுதான் அவனுக்கு வேலை.

விரஜ பாபு வேலையைப் பற்றிக் கேட்டால் மௌனம் சாதித்துவிடுவான்; இல்லாவிட்டால், 'அந்த ஆசாமியைக் காணவில்லை' என்று சொல்லி விடுவான்.



மூன்றாவது அத்தியாயம்

நாலு வருஷத்துக்கு முந்தி விரஜ பாபுவின் மனைவி காலமாகிவிட்டாள். வயோதிகத்தின் இந்தத் துக்கத்தைக் கிழவர்கள்தான் உணர முடியும். ஆனால் அது போகட்டும். அதைவிட அவருக்குப் பெரிய கஷ்டம் என்னவென்றால் பதினாறாவது வயதில் அவருடைய அருமை மகள் கைம்பெண் ஆனதுதான். அவர் ஏக தடபுடலாகத் தம் பெண்ணுக்குக் கலியாணம் பண்ணி வைத்தார். அவரோ பணக்காரர். ஆதலால் அவர் பணத்தை லட்சியம் பண்ணவில்லை. பையன் பணக்காரனா இல்லையா என்பதையும் கவனிக்கவில்லை. பையனுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா, அழகனா, ஒழுங்கானவனா என்பதை மாத்திரம் கவனித்து, அவர் மாதவிக்கு மணம் புரிந்து வைத்தார்.

பதினோராவது வயதில் மாதவிக்கு விவாகம் ஆயிற்று. மூன்று வருஷங்கள் வரை புக்ககத்தில் இருந்தாள். அங்கே ஆதரவுடன் பாதுகாக்கப்பட்டதும் வாஸ்தவம். ஆனால் யோகேந்திரநாதன் தொலைந்துவிட்டான். சாகும் சமயத்தில் மாதவி அடித்து அழுதுகொள்ள ஆரம்பித்தாள்.

அவன் பிரியமான குரலில், 'மாதவி! உன்னை விட்டுப் போக வேண்டுமே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் உன்னைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை — போஷிக்க முடியவில்லை—' என்றான்.

பேசும் போதே எலும்புக்கூடாய் மெலிந்திருந்த யோகேந்திரனின் மார்பில் கண்ணீர் ஓடியது. அதைத் துடைத்துக்கொண்டே மாதவி, 'மறுபடி நான் உங்களுடைய சரணங்களை அடையும் போது என்னை ஆதரியுங்கள்' என்றாள்.

'மாதவி! என் சுகத்திற்காக சமர்ப்பிக்க இருந்த உன்னுடைய வாழ்க்கையை எல்லோருடைய சுகத்திற்காகவும் செலவழி. கவலை நிறைந்த முகமுள்ளவர்களைக் கண்டால் அவர்களைச் சந்தோஷப்படுத்தப் பிரயத்தனம் செய். நான் வேறு என்ன சொல்லுவது, மாதவி?'

மறுபடியும் கண்ணீர்த் துளிகளை மாதவி துடைத்தாள்.

'நீ நல்ல வழியை விட்டு விலகாதே. நீ செய்யும் புண்ணியத்தால்தான் நாம் மறுபடி எப்பொழுதாவது சேரமுடியும்.'

அன்றிருந்து மாதவி மாறிப்போய் விட்டாள். கோபம், ஹிம்சை, துவேஷம் எல்லாவற்றையும் கணவரின் சிதையோடு எரித்து, கங்கை நீரில் கரைத்து விட்டாள்.

விதவையாகி விட்டால் மகளிருடைய ஆசா பாசங்கள் எல்லாம் அவிந்துவிடுவதில்லை. அவை தோன்றும் போதெல்லாம், மாதவி தன் புருஷனைப் பற்றி நினைத்துக்கொள்வாள். 'அவர்தான் போய்விட்டாரே; எனக்கு இதெல்லாம் எதற்கு? எதற்காகப் பிறர்மீது பொறாமைப்பட வேண்டும்? எதற்காகப் பிறரை அழச் செய்ய வேண்டும்?' என்றெல்லாம் யோசிப்பாள். முன்னாலும் அவளுக்கு இந்த அற்பத் தனங்கள் எல்லாம் கிடையாது; அவள் பெரிய

வீட்டுப் பெண் ; ஹிம்சிக்கவோ பொருமைப்படவோ அவளுக்குத் தெரியாது.

அவளுடைய தோட்டத்தில் பல மலர்கள் மலர்கின்றன. முன்பு அவள் அவைகளை மாலையாகத் தொடுத்துத் தன் கணவர் கழுத்தில் போடுவது வழக்கம். ஆனால் அவர் போய்விட்டாரே என்று அவள் அந்தப் பூச்செடிகளை வெட்டி எறிந்துவிடவில்லை. இப்போது அவள் அந்தப் பூக்களைத் தொடுக்க உட்காருவதில்லை. ஆனால் அவைகளைக் கூடியவரை ஒன்று சேர்த்து ஏழை எளியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கம். அவ்வாறு செய்ய அவள் தயங்குவதோ, கருமித்தனம் செய்வதோ கிடையாது.

விரஜ பாபுவின் மனைவி பரலோகப் பிராப்தி அடைந்த நாளிலிருந்து அவர் வீட்டில் ஒழுங்கு இல்லாது போய்விட்டது. வீட்டில் ஒவ்வொருவருக்கும் தனித் தனியான கவலைகள்; இன்னொருவரைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. எல்லோருக்கும் தனித்தனியாக வேலையாட்கள் இருந்தார்கள் ; அவர்கள் தங்கள் தங்கள் எஜமானர்களுடைய வேலைகளைத் தான் கவனிப்பார்கள். சமையலறையில் சமையற்காரன் சமைப்பான் ; அன்ன சத்திரத்தில் கூடுவது போல் எல்லோரும் கூட்டமாகப் போய் உட்காருவார்கள் ; சிலருக்குச் சாப்பாடு கிடைக்கும் ; சிலருக்குக் கிடைக்காது ; கிடைக்காதவர்களை ஏன் என்று யாரும் கேட்க மாட்டார்கள்.

ஆனால்,புரட்டாசி மாதத்தில் கரைபுரண்டோடும் கங்கா நதியைப் போன்ற தன் அழகுடனும் அன்புடனும் மாதவி தன் தகப்பனர் வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் வீட்டில் ஒரு புது வஸந்தகாலம் ஆரம்பித்

தாற் போலிருந்தது. எல்லோருக்கும் மாதவி 'அக்கா' ஆகிவிட்டாள். வீட்டில் வளரும் நாய் முதற்கொண்டு 'அக்கா'வைச் சாயங்காலம் ஒரு தடவை பார்க்கா விட்டால் திருப்தி அடையாது. அதுக்குக்கூட அவள் அன்பு மூர்த்தி என்று தெரியும் போலிருக்கிறது! வீட்டு எஜமானன் முதல் வேலைக்காரன் வரை எல்லோருக் குமே 'அக்கா'வைப் பற்றின நினைவு. எல்லோருக்கும் அவளிடம் அலாதியான அன்பு.

சுவர்க்கத்தில் கற்பக விருக்ஷம் என்பதாக ஒரு மரம் இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறோம்; அதன் அடியில் நின்றால் நாம் வேண்டுவதெல்லாம் கொடுக்குமாம்; அதை நாம் பார்த்ததில்லை; பார்ப் போமா என்பதும் சந்தேகம்தான்! ஆனால் விரஜ பாபுவின் வீட்டில் எல்லோரும் ஒரு கற்பக தருவைக் கண்டுவிட்டார்கள். அதன்கீழ் 'இது இல்லை' என்று கை விரிக்கிறார்கள்; 'கிடைத்தது' என்ற சந்தோ ஷத்துடன் திரும்புகிறார்கள்.

இந்த மாதிரி குடும்பத்தில் சுரேந்திரன் ஒரு புது மாதிரி வாழ்வு வாழ வழி கண்டுபிடித்தான். எல் லோரும் ஒருவர் மீதே எல்லாப் பாரத்தையும் ஏற்றி யிருப்பதைக் கண்ட அவனும் தன் சுமையை அந்த ஆள்மீது சுமத்தத் தயங்கவில்லை. ஆனால் அவனு டைய போக்கின் மாதிரியே வேறு. 'அக்கா' என்று ஒரு ஜீவ பதார்த்தம் வீட்டில் இருந்துகொண்டு எல் லோரையும் கண்காணிக்கிறது, எல்லோருடைய குறைகளையும் தீர்க்கிறது, வேண்டியவர்க்கு வேண்டிய படி கொடுக்கிறது என்றுதான் அவன் நினைப்பு. கல் கத்தா வீதிகளில் அலைந்த அவனுக்குச் சுயமாக வாழக் கொஞ்சம் தெரிந்தது; ஆனால் அந்த வழக்கம் இங்கே

வந்ததும் மறுபடி விட்டுப் போய்விட்டது; அப்படி அலேந்ததாகவோ, அலேய நேரும் என்றே அவன் எண்ணிப் பார்க்கவில்லே.

சட்டை, மேல் வேஷ்டி, செருப்பு, குடை, தடி முதலிய எல்லாச் சாமான்களும் வேளா வேளேயில் தயாராக இருக்கும். முதலில் அவன் குதூகலமாய், 'இதை யெல்லாம் யார் அனுப்பினது?' என்று கேட்பான். 'அக்காதான்' என்று பதில் வரும். இப்போது அதுவும் சகஜமாகிவிட்டது. தனக்குச் சிற்றுண்டிக்காக வரும் பக்ஷணத்தைக்கூட அக்கா தொட்டு அனுப்பியிருக்கிருள் என்று அவனுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் கணக்குப் போட உட்கார்ந்த போது 'காம்பஸ் இல்லேயே' என்று ஞாபகம் வந்தது. உடனே அவன் பிரமீளாவிடம், 'பிரமீளா, அக்கா கிட்டே போய் காம்பஸ் கொண்டுவா!' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அக்காவிடம் 'காம்பஸ்' ஏது, அதை வைத்துக்கொண்டு அவள் என்ன செய்யப்போகிருள் என்று அவன் யோசிக்கவே யில்லே. ஆனுல் அக்கா 'இல்லே' என்று சொல்லவில்லே. உடனே ஓர் ஆளேக் கடை வீதிக்கு அனுப்பினுள்.

சாயந்திரம் சுற்றிவிட்டு வந்த சுரேந்திரன் மேஜை மீது 'காம்பஸ்' கிடப்பதைக் கண்டான். மறுநாள் காலே பிரமீளா, 'ஸார்! அக்கா நேத்தைக்கு இதைக் கொடுத்தாள்' என்று அது அங்கே வந்த விவரத்தைத் தெரிவித்தாள்.

நடு நடுவில் அவன் கேட்கும் சாமான் மாதவியை எக்கச்சக்கத்தில் மாட்டிவிடும். ரொம்ப சிரமப்

பட்டு அதை வாங்கித் தரவேண்டியதா யிருக்கும். ஆனால் 'அது கிடையாது' என்று அவள் சொல்லணுமே—அதுதான் கிடையாது.

சில சமயம் அவன், 'அக்காவிடம் போய் அஞ்சு பழைய துணி கொண்டுவா! பிச்சைக்காரன்களுக்குக் கொடுக்கணும்!' என்று வலு-கட்டாயமாகப் பிரமீளாவிடம் சொல்லி அனுப்புவான். ஆனால், பழசா புதுசா என்று பார்த்துக்கொண்டிருக்க 'அக்கா'வுக்கு நேரம் ஏது? உடனே அவள் தான் அணியும் துணிகளில் அஞ்சைக் கொடுத்தனுப்பிவிட்டு மேல் ஜன்னலில் இருந்து எட்டிப் பார்ப்பாள். நாலைந்து ஏழைகள் துணிகளை எடுத்துக்கொண்டு ஆனந்தமாகக் கூத்தடித்துக்கொண்டு போவதைக் காண்பாள்.

இம்மாதிரி சுரேந்திரன் செய்யும் தொல்லைகளையெல்லாம் அவள் சகிக்கவேண்டியிருந்தது. ஆனால் காலக் கிரமத்தில் அவளுக்கு அவை யெல்லாம் பழக்கமாகிவிட்டன. வீட்டில் ஒரு புது மனுஷன் அடிக்கடி உபத்திரவம் தந்துகொண்டிருக்கிறான் என்பதைக்கூட அவள் மறந்துவிட்டாள்.

அதோடு போகவில்லை. அந்தப் புது ஆசாமியை அவள் எப்போதும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அடிக்கடி அவனை விசாரித்துக்கொண்டிருப்பதும் அவசியமாயிற்று. அவன் தனக்கு வேண்டிய சாமானைக் கேட்டு வாங்கிக்கொண்டாலே எவ்வளவோ தேவலை; அதனால் மாதவியின் பாதிக் கஷ்டம் தீர்ந்துவிடும். ஆனால் அவன் தனக்காக ஒன்றையும் கேட்பதில்லை. முதலில் மாதவியால் அவனுடைய சுபாவத்தை அறிய முடிய

வில்லை; அவன் புத்தி எப்போதுமே சஞ்சலமாக இருக்கும் என்று அவள் நினைக்கவில்லை. காலையில் 'டீ' ஜில்லிட்டுப் போயும் அவன் குடிக்காமல் உட்கார்ந்திருப்பான். காலையில் ஆகாரம் செய்ய வேணும் என்கிற ஞாபகம்கூட அவனுக்கு இராது; ஒவ்வொரு சமயம் சாப்பாட்டை நாயிடம் போட்டு விட்டுப் போய்விடுவான். சாப்பிட உட்கார்ந்தால் கவனம் இலையில் இருக்காது. நல்ல நல்ல தின்பண்டங்களை ஒதுக்கி வைத்துவிடுவான். இல்லாவிட்டால் ஒளித்து வைத்துவிடுவான். அதை யெல்லாம் பார்த்து வேலைக்காரர்கள், 'வாத்தியார் பித்துக்குளி போலிருக்கு; சரியாகக்கூடச் சாப்பிடாமல் எப்போ பார்த்தாலும் புஸ்தக ஞாபகம்!' என்று சொல்லிக் கொள்வார்கள்.

நடு நடுவில் விரஜ பாபு, 'வேலைக்கு ஏதாவது ஏற்பாடு ஆச்சா?' என்று கேட்பார். சுரேந்திரன் சரியாகப் பதில் அளிக்காமல் மழுப்பிவிடுவான். எல்லாவற்றையும் கேட்டு மாதவி, வாத்தியார் வேலைக்காகப் பிரயாசைப்படவில்லை, வேலை செய்ய அவருக்கு இஷ்டமும் இல்லை, கிடைத்ததே போதும் என்று இருக்கிறார் என எண்ணிக்கொள்வாள்.

காலையில் பத்து மணி அடித்ததும் அக்காவிடமிருந்து சாப்பாட்டுக்கும் ஸ்நானத்துக்கும் உத்தரவு வரும். சரியாகச் சாப்பிடாவிட்டால் அக்காவின் சார்பாகப் பிரமீளா புகார் செய்வாள். ராத்திரி ரொம்ப நேரம் படித்துக்கொண்டிருந்தால் வேலைக்காரன் 'சுவிச்சை' அமுக்கிவிட்டுப் போவான். என்ன சொன்னாலும் கேட்கமாட்டான். 'ஏன்?' என்றால் 'அக்கா ஆக்ஞை!' என்பான்.

ஒரு நாள் மாதவி சிரித்துக்கொண்டே, ‘அப்பா, பிரமீளாவுக்கும் அவளுடைய வாத்தியாருக்கும் வித்தியாசமே இல்லை—’ என்று அப்பாவிடம் சொன்னாள்.

‘ஏன் அம்மா?’

‘ரெண்டு பேருமே குழந்தைகள். எந்தச் சமயத்தில் எது செய்யவேண்டும், எது செய்யக் கூடாது என்று பிரமீளாவுக்குத் தெரியாது. அவளுடைய ஸாருக்கும் அப்படித்தான்—ஒன்றும் தெரியாது.’

விரஜ பாபு முழித்துக்கொண்டு நின்றார்.

‘உன் மகளுக்கு இன்ன சமயத்தில் இன்ன சாமான் வேணும் என்று தெரியுமா?’

‘தெரியாது?’

‘அகாலத்தில் உபத்திரவம் செய்கிறாளோ?’

‘ஆம், செய்கிறாள்.’

‘வாத்தியார் கூட அப்படித்தான் செய்கிறார்!’

விரஜ பாபு சிரித்துக்கொண்டே சொன்னார்: ‘பையனுக்குக் கொஞ்சம் பைத்தியம் போலிருக்கு-’

‘பைத்தியமில்லை, பெரிய வீட்டுக் குழந்தை போல் தெரிகிறது.’

‘உனக்கு எப்படித் தெரியும்?’ என்று ஆச்சரியத்துடன் கேட்டார் விரஜ பாபு.

மாதவிக்குத் தெரியாது; அப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவள் எண்ணம். சுரேந்திரனுக்குத் தானாக ஒரு வேலையும் செய்யத் தெரிவதில்லை; தன் வேலையையும் பிறர் உதவிகொண்டே அவன் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொருவன் ஒத்தாசை செய்யாவிட்டால் அவனும் ஒன்றும் செய்ய மாட்டான்; முக்கியமாக அவன் சாப்பாட்டில்

அலட்சியமாக இருப்பதுதான் மாதவிக்கு ஆச்சரிய மாக இருந்தது ; வாயில் நீர் ஊறச் செய்யும் 'தித்திப் புக்களை' யும் கண்ணெடுத்துப் பாராதவன் சாமான்ய மனுஷனாக இருக்க முடியாது என்றுதான் அவள் நினைப்பு ! அவனுடைய தன்னை-மறந்த வாழ்வும் பூர்வாசிரம வாசனைதான் என்று அவள் எண்ணம். கிழவர்களைப் போன்ற அவனுடைய வைராக்கியமும், பாலர்களை யொத்த ஸரளமும், பைத்தியக்காரர்களை யொத்த அலட்சியமும் அவளுக்கு ஏதோ ரகசிய மாகப் பட்டுக்கொண்டிருந்தன. அவளுக்கு யாரென்று தெரியாத அந்த 'ஸாரிடம்' இன்னதெனப் புரியாத ஓர் இரக்கம் உண்டாகிவிட்டது. வெட்கத்தால்தான் ஒன்றும் கேளாமல் இருக்கிறான் என்று சொல்லுவதற் கில்லை ; அந்த ஆசாமிக்கு ஏதாவது வேண்டியதா யிருந்துவிட்டால், காலம் அகாலம் ஒன்றையும் கவ னிக்காமல், நேராக 'அக்கா' வுக்குச் சொல்லி அனுப் பிவிடுவான். அப்போது மாதவி, 'இந்த மனுஷன் சின்னக் குழந்தைகளைப் போலத்தான் ; அப்பு அழுக்கு இல்லாதவன்' என்று தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொள்வாள்.

நான்காவது அத்தியாயம்

மனோரமா மாதவியின் தோழி. அவளுக்குக் கடிதம் எழுதி ரொம்ப நாளாகிவிட்டது. பதில் வராததால் தோழிக்குக் கோபம். அன்று மத்தியானம் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு கடுதாசி எழுத உட்கார்ந்தாள். அந்தச் சமயத்தில், 'அக்கா' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள் பிரமீளா.

நிமிர்ந்து, 'என்னடீ?' என்ருள் மாதவி.

'ஸாருடைய மூக்குக் கண்ணுடி கெட்டுப் போயிட்டுது; ஒரு கண்ணுடி தா!'

மாதவி சிரித்துவிட்டாள். 'நான் மூக்குக் கண்ணுடிக் கடை வைத்திருக்கிறேஞ என்ன?'

பிரமீளா ஓடிப்போக விருந்தாள். மாதவி அவளைக் கூப்பிட்டு, 'எங்கே போகிருய்?' என்று கேட்டாள்.

'அவர் கிட்டே சொல்ல—'

'வேண்டாம்; கணக்குப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வா!'

பிரமீளா குமாஸ்தாவை அழைத்து வந்தாள். அவரிடம், 'ஸாருடைய மூக்குக் கண்ணுடி காணேமாம். அவருக்காக ஒரு நல்ல கண்ணுடி வாங்கிக் கொடும்' என்று சொன்னுள்.

குமாஸ்தா போனதும் மறுபடியும் கடிதம் எழுதிஞள். அதன் கடைசியில் கீழே கண்டபடி சில வரிகளையும் எழுதிஞள்: 'அப்பா பிரமீளாவுக்கு ஒரு வாத்தியாரை வைத்திருக்கிருர். அவனை "ஆள்" என்றும் சொல்லலாம்; "குழந்தை" என்றும் சொல்ல

லாம். அவன் ஒருபோதும் வீட்டைவிட்டு வெளியே போனதில்லை என்று தோன்றுகிறது. உலக விவகாரமே ஒன்றும் தெரியவில்லை. அவனைச் சரியான படி கவனிக்காவிட்டால் அவனுடைய வேலை ஒன்றுமே நடக்காது. என்னுடைய நேரத்தில் பாதியை அவனுக்காகவே செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. உனக்குக் கடிதம் எழுதக்கூட நேரம் இருப்பதில்லை. இந்த மாதிரி அசிரத்தையான-மறதியுள்ள-மனுஷனை இந்த ஜன்மத்தில் காண முடியாது. சாப்பிடக் கொடுத்தால் சாப்பிடுகிறான். இல்லாவிட்டால் இல்லை. சாப்பிட்டானா இல்லையா என்றுகூட அவனுக்கு ஞாபகம் இராது போலிருக்கிறது! ஒரு நாள் கூட அவனால் தனியாகப் பொழுதைக் கழிக்க முடியாது. ஆகையால் இம்மாதிரி ஆட்களை வீட்டைவிட்டு ஏன் கிளப்புகிறார்கள் என்று எனக்கு யோசனையாகிவிட்டது. பெற்றவர்களும் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் கல் நெஞ்சர்களாக இருக்க வேணும் என்று தோன்றுகிறது; இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அம்மா-மடிக்-குழந்தையைத் தனியே விடுவார்களா? நானாக இருந்தால் கண்ணிலிருந்து மறையவும் விடமாட்டேன்.'

மனோரமா கேலியாகப் பதில் அளித்தாள். 'உன்னுடைய கடிதத்தின் மற்ற சமாசாரங்களோடு, நீ வீட்டில் ஒரு ஹனுமந்தரைப் போஷிக்கிறாய் என்று தெரியவருகிறது. நீ அவருடைய ஸீதாதேவி ஆகியிருக்கிறாய் என்றும் தெரிகிறது. ஆனாலும் ரொம்ப ஸாவதானமாக இரு. —மனோரமா.'

கடிதம் படித்ததும் மாதவிக்கு வருத்தம் உண்டாகிவிட்டது. 'நீ ரொம்பச் சுடு மூஞ்சி; யாரிடம்

எப்படி வேடிக்கை பண்ணவேண்டும் என்று கூட உனக்குத் தெரியாது' என்று எழுதிவிட்டாள்.

மாதவி, 'ஸாருடைய கண்ணாடி சரியாக இருந்ததா?' என்று பிரமீளாவிடம் கேட்டாள்.

'ஓ! சரியாக இருந்தது.'

'உனக்கு எப்படித் தெரியும்?'

அதைப் போட்டுக்கொண்டு அவர் ஜோராகப் படிக்கிறார்!'

'அவர் ஒன்றும் சொல்லவில்லையா?'

'இல்லை, ஒண்ணுமே சொல்லவில்லை.'

'ஒன்றுமே சொல்லவில்லையா? சரியாச்சா இல்லையா என்று கூட...?'

'ஊஹூம்!'

எப்பொழுதும் மலர்ந்திருக்கும் மாதவியின் முகம் ஒரு கணம் வாடிவிட்டது. ஆனால் மீண்டும் பழைய சிரிப்பை வருவித்துக்கொண்டு, 'மறுபடியும் கண்ணாடியைக் கெட்டுப் போக்கிவிடாதீர்கள் என்று ஸாரிடம் சொல்லு!' என்றாள்.

'சரி, சொல்லுகிறேன்.'

'சீ, பைத்தியக்காரி! அப்படிச் சொல்லலாமோ? அவர் ஏதாவது நினைத்துக்கொள்ள மாட்டாரோ?'

'அப்படியானா ஒண்ணும் சொல்ல வேண்டாமா?'

'வேண்டாம்.'

சிவசந்திரன் மாதவியின் தமையன். ஒரு நாள் அவனிடம் மாதவி, 'ஏன் அண்ணா, பிரமீளாவோட ஸார் இராப் பகலாக விழுந்து விழுந்து என்ன படிக்கிறார்?' என்று கேட்டாள்.

சிவசந்திரன் பி. ஏ. படித்துக்கொண்டிருந்தான். கேவலம் பிரமீளாவின் வாத்தியாரைப் போன்ற அற்

பர்களை அவன் பெரிதாக நினைப்பதேயில்லை. 'ஏதாவது நாடகம் நாவல் படித்துக்கொண்டிருப்பார்; வேறு என்னத்தைப் படிக்கப்போகிறார்?' என்றான் அலட்சியமாக.

ஆனால் மாதவிக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. சுரேந்திரனுடைய புஸ்தகம் ஒன்றைப் பிரமீளா மூலம் திருட்டுத்தனமாக வரவழைத்துத் தன் அண்ணாவிடம் கொடுத்து, 'இது நாவலாகவோ நாடகமாகவோ இருக்காது போலிருக்கிறதே!' என்று கேட்டாள்.

சிவசந்திரன் புஸ்தகம் முழுவதையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; ஆனால் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அது ஏதோ கணக்குப் புஸ்தகம் என்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால் தங்கை முன் தாழ அவன் விரும்பவில்லை. 'இது கணக்குப் புஸ்தகம்; ஸ்கூலில் சின்னக் கிளாஸ் களுக்கு வேண்டியது.' என்று சொன்னான்.

மாதவி வருத்தமாகக் கேட்டாள்: 'இது மேல் வகுப்புப் புஸ்தகம்கூட இல்லையா?'

சிவசந்திரன் வாடின முகத்துடன், 'இல்லை, இல்லவேயில்லை!' என்று கூறிவிட்டான்.

அன்றிருந்து சிவசந்திரன் சுரேந்திரன் முன் அதிகமாக எதிர்ப்படுவதில்லை. அவன் ஏதாவது கேட்டு விட்டால், அதனால் தன் வண்டவாளம் வெளிப்பட்டு, பிரமீளாவுடன் காலையில் பென்ஸில் காப்பி புஸ்தகம் எடுத்துக்கொண்டு உட்காரும்படி நேர்ந்துவிடப் போகிறதே என்று சிவசந்திரனுக்கு உள்ளுக்குள் பயம்.

சிலநாள் கழித்து மாதவி தன் தகப்பனாரிடம், 'அப்பா, நான் கொஞ்ச நாள் காசிவாசம் செய்யப் போகிறேன்' என்று சொன்னாள்.

விரஜ பாபுவுக்குக் கவலை உண்டாகிவிட்டது. 'ஏன் அம்மா, நீ காசிக்குப் போய்விட்டால் இந்தக் குடும்பம் என்ன ஆவது?'

மாதவி சிரித்தாள். 'நான் திரும்பி வந்துவிடுவேன், அப்பா! ஒரேயடியாகப் போய்விட மாட்டேன்.'

அவள் சிரித்தாலும் அப்பாவின் கண்களில் ஜலம் நிறைய ஆரம்பித்தது. தான் அப்படிச் சொன்னது தப்பு என்று மாதவிக்குப் பட்டது. ஆகையால் பேச்சை மாற்றி, 'சும்மா கொஞ்ச நாள் சுற்றிவிட்டு வருகிறேன், அப்பா!' என்றாள்.

'அப்படியானால் போ! ஆனால் இந்தக் குடும்பம் சரிவர நடக்காது.'

'நான் இல்லாமல் குடும்பம் நடக்காதா என்ன?'

'ஏன் நடக்காது? பாய்மரம் இல்லாத படகு போல் நடக்கும்.'

ஆனால் அவள் காசிக்குக் கட்டாயம் போகவேண்டியதாக இருந்தது. வேலைக்காரக் கிழவியைக் கூப்பிட்டு, வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னாள்; முக்கியமாக அப்பா, அண்ணா, பிரமீளா மூவரையும் ரொம்பக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி உபதேசம் செய்தாள். ஆனால் 'ஸாரை'ப் பற்றி அவள் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. அவள் மறந்து போகவில்லை. வேண்டுமென்றே ஒன்றும் சொல்லவில்லை. அவர்மேல் அவளுக்கு ரொம்பக் கோபம். அவள் அவருக்காக எவ்வளவோ வேலை செய்தும், வாய் திறந்து ஒரு வார்த்தையாவது நன்றிக்காகச் சொன்னாரா? ஆகையால் தான் அயலூருக்குப் போய், அந்தக் கடமை தெரியாத, நடப்புத் தெரியாத, உதாசினமான 'ஸாரு'க்குத் தானும்

ஒரு 'மனுஷி'தான் எனக்காட்ட வேண்டும் என்று அவள் ஆசை. கொஞ்சம் வேடிக்கை செய்து பார்க்கலாமே என்றுகூட அவள் ஆவல். அவள் இல்லாமல் 'ஸாரு'க்கு எப்படி நாள் போகிறது என்பதையும் பார்க்கலாமே! ஆகையால்தான் அவள் அவரைப் பற்றி யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை.

அப்போது 'ஸார்' ஏதோ 'பிராப்ளம்' 'ஸால்வ்' பண்ணிக்கொண்டிருந்தார்.

'நேத்தைக்கு ராத்திரி அக்கா காசிக்குப் போய் விட்டாள்!' என்று சொன்னாள் பிரமீளா.

அவள் பேச்சு அவன் காதுக்கு எட்டவேயில்லை; அவன் அதைக் கவனிக்கவுமில்லை. ஆனால் வீட்டில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்று அவனுக்குத் தானாகவே தெரிந்துவிட்டது. முன்போலப் பத்து மணிக்குச் சாப்பிடச் சொல்லி அவனை யாரும் தொந்தரவு செய்யவில்லை. சில சமயம் ஒரு மணி, இரண்டு மணிகூட ஆகிவிடும். குளித்துவிட்டு, வஸ்திரத்தைப் பார்த்தால் அழுக்குப் படிந்ததாக இருக்கும். ராத்திரி 'சுவிச்சை' அமுக்க யாரும் வரவில்லை; அவன்பாட்டில் இரண்டு, மூன்று மணி வரை படித்துக் கொண்டே இருப்பான்; அப்புறம் படுத்தால் காலையில் எழுந்திருக்க நேரமாகிவிடும்; நாள் முழுவதும் கொட்டாவி விட்டபடியே இருப்பான்; உடம்பு முழுதும் ஒரே வலியாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால், அவனுடைய தினசரி வேலைகளில் ஒரு புரட்சி உண்டாகிவிட்டது. அப்போதுதான், 'சரி தான், குடும்பத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது!' என்று அவனுக்குப் பட்டது. ஆம், புழுக்கமான காலத்தில்தானே, விசிறியின் ஞாபகம் வரும்?

சுரேந்திரன் புஸ்தகத்தின் மீதிருந்த பார்வையை விலக்கி, ‘ஏன் பிரமீளா ! அக்கா இங்கே இல்லையா ?’ என்று கேட்டான்.

‘காசிக்குப் போயிருக்கிருள்.’

‘அப்படியா !’

இரண்டு நாளுக்குப் பிறகு அவன் திடீரென்று, ‘அக்கா எப்போது வருவாள் ?’ என்று கேட்டான்.

‘ஒரு மாசம் ஆகும்.’

சுரேந்திரன் மறுபடியும் புஸ்தகத்தில் ஆழ்ந்து விட்டான். மேலும் ஐந்து நாட்கள் கழிந்தன. அவன் புஸ்தகத்தின்மேல் பென்ஸிலை வைத்துக் கொண்டு, ‘பிரமீளா, ஒரு மாசம் ஆக இன்னும் எத்தனை நாள் பாக்கி ?’ என்று கேட்டான்.

‘ரொம்ப நாள் இருக்கு.’

சுரேந்திரன் பென்ஸிலை அகற்றி, மூக்குக் கண்ணுடியை எடுத்து, இரண்டு கண்ணுடிகளையும் துடைத்தான். பிறகு வெறும் கண்களுடன் புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் கேட்டான்: ‘பிரமீளா, நீ அக்காவுக்குக் கடுதாசி போடுவதில்லையா ?’

‘போடாமே என்ன !’

‘சீக்கிரம் வரச்சொல்லி எழுதவில்லையா ?’

‘இல்லை.’

ஒரு சின்ன நெடுமூச்சு விட்டுக்கொண்டு சுரேந்திரன், ‘அப்படியா !’ என்ருன்.

‘ஸார், அக்கா வந்துவிட்டால் தேவலை; இல்லையா ?’

‘ஆமாம்.’

‘வரும்படி எழுதிவிடட்டுமா ?’

அவன் சந்தோஷமாக, 'எழுது!' என்ருன்.

'உங்களைப் பற்றிக்கூட எழுதட்டுமா?'

'எழுது!'

'எழுது' என்று சொல்ல அவனுக்குக் கஷ்டம் உண்டாகவில்லை. காரணம், உலகத்தின் நீதி நியமம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அக்காவை வரும்படி வேண்டிக்கொள்வது தனக்கு அழகல்ல என்று அவனுக்குத் தெரியவில்லை. அக்கா இல்லாமல் அவனுக்குச் சிரமமாக இருக்கிறது; அவளை வரச்சொல்லி வேண்டுவதில் என்ன தப்பு என்றுதான் அவன் நினைப்பு..

இந்த உலகில் குதூகலக் குறைவுள்ள மனிதர்கள் மற்றவர்களைப் போலில்லாமல் ஒரு மாதிரியாகத்தான் இருப்பார்கள். சாதாரண மனிதர்கள் புழங்கும் கூட்டத்துக்கும் அவர்களுக்கும் ஒன்றும் ஒத்துவராது. சாதாரண மனிதர்களுடைய அபிப்பிராயத்துக்கும் அவர்களுடைய கருத்துக்கும் ஒன்றும் சரிக்கட்டி வராது. சுரேந்திரன் இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவன். தனக்கு வேண்டிய மட்டும் தெரிந்து கொண்டால் அவனுக்குப் போதும்; அதை மீறி ஓர் அடிகூட எடுத்து வைக்க அவனுக்கு இஷ்டமில்லை; நேரமுமில்லை. ஆகையால்தான் அவன் அக்காவைப் பற்றி அசிரத்தையாக இருந்தான். அந்தக் குடும்பத்தில் அவன் வந்து மூன்று மாதமாகிவிட்டது; இவ்வளவு காலமாகத் தன் பாரத்தையெல்லாம் 'அக்கா' மீது சுமத்திவிட்டு, அவன் சௌக்கியமாகக் காலம் கழித்துக்கொண்டிருந்தான். ஆனல் அந்த ஜீவன் எப்படி இருக்கிறது, எத்தனை பெரிசு, எத்தனை வயசு, பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது,

அதற்கு என்ன என்ன குணங்கள் இருக்கின்றன என்று அறிய அவனுக்கு ஆவல் உண்டானதேயில்லை; தெரியவும் தெரியாது; அறிய வேண்டும் என்று அவன் நினைத்ததுமில்லை. எல்லோரும் அவளை ‘அக்கா’ என்கிறார்கள்; அவனும் ‘அக்கா’ என்கிறான். எல்லோரும் அவளிடமிருந்து அன்பும் ஆதரவும் அடைகிறார்கள்; அவனும் அடைகிறான். அவளிடம் வேண்டியவர்க்கு வேண்டியபடி கிடைக்கிறது; அவனுக்கும் கிடைக்கிறது. அப்படி யிருக்க, அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

மேகத்தின் வேலை நீர் பொழிவது; ‘அக்கா’வின் வேலை அன்பு பொழிவது. மழை பெய்யும் போது கைநீட்டுகிறவனுக்கு ஜலம் கிடைக்கிறது.

‘அக்கா’ முன்னிலையில் கை நீட்டினால் தேவையான சாமான் கிடைக்கிறது. முகிலைப் போலவே அவளும் ஆசையும் பற்றும் இல்லாதவள் போலும்! ‘அக்கா’வைப் பற்றி அவனுக்கு இந்த நினைவுதான். முன்பும் இந்த நினைவுதான். இப்போதும் அதுதான். ஆனால் இப்போது ‘அக்கா’ காசிக்குப் போனதிலிருந்து, அவள் இல்லாமல் தான் ஒரு க்ஷணம் கூட உயிர் வாழ முடியாது என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது.

வீட்டிலிருந்த சமயம் அவனுக்குத் தன் தகப்பனாரைத் தெரியும்; சித்தியைத் தெரியும்; அவர்களுடைய கடமை என்ன என்றும் தெரியும். ஆனால் அவன் எந்த ‘அக்கா’வோடும் பழகினதில்லை; பழக நேர்ந்த போது அவன் அப்படித்தான் எண்ணிக் கொண்டான். ஆனால், அவன் மனிதனைத் தெரிந்து கொள்ளவுமில்லை, புரிந்துகொள்ளவுமில்லை. அவ

னுக்குப் பெயர் மட்டில்தான் தெரியும், புரியும். மனிதனைப் பற்றி அவனுக்கு அக்கறை ஒன்றும் இல்லை; அவனுக்குப் பெயர்தான் ஸர்வமும்.

ஜனங்கள் தங்கள் இஷ்ட தேவதையைக் கண் முன் காணப் பெறுவதில்லை; அதன் பெயரை மாத்திரம் எழுதி வைத்துக்கொள்ளுகிறார்கள்; அக் காலத்தில் அந்தப் பெயருக்கு முன்னால்தான் தங்கள் துக்கங்களைத் தாராளமாக வெளியிடுகிறார்கள்; அதன் முன் பணிந்து இரங்கும்படி வேண்டுகிறார்கள்; கண்களில் ஜலம் வந்துவிடுகிறது; அதைத் துடைத்துக் கொண்டு வெற்றுப் பார்வை செலுத்தி, எதையோ காண விரும்புகிறார்கள்; ஆனால் ஒன்றும் தெரியாவிட்டாலும் வாயிலிருந்து இரண்டு, மூன்று வார்த்தைகள் தடங்கலுடன் வெளிவருகின்றன. அதைப் போலவே சுரேந்திரனுக்கும் கஷ்ட காலத்தில் அவள் ஞாபகம் வந்தது; 'அக்கா!' என்று அவன் வாய் உச்சரித்தது!

ஐந்தாம் அத்தியாயம்

இன்னும் வெள்ளி முளைக்கவில்லை; கிழக்கு வானம் சிவந்திருந்தது. பிரமீளா ஓடிவந்து சுரேந் திரனுடைய கழுத்தைப் பிடித்துக்கொண்டு, 'ஸார்!' என்று கூப்பிட்டாள்.

சுரேந்திரன் மெதுவாகக் கண்ணைத் திறந்து, 'என்ன பிரமீளா?' என்றான்.

'அக்கா வந்துவிட்டாள், ஸார்!'

அவன் எழுந்து உட்கார்ந்தான். பிரமீளாவின் கையைப் பிடித்துக்கொண்டு, 'வா, போய் அக்கா வைப் பார்த்துவிட்டு வரலாம்' என்றான்.

அவளைப் பார்க்க வேண்டும் என்கிற இந்த ஆவல் அவனுக்கு எப்படி உண்டாயிற்று என்று சொல்ல முடியாது. இவ்வளவு நாள் கழித்து, அவன் கண் களைத் தேய்த்துக்கொண்டு, பிரமீளாவின் கையைப் பிடித்தவண்ணம் ஏன் உள்ளே போனான் என்றும் தெரியவில்லை. ஆயினும், அவன் உள்ளே போய், படிக ளேறி மேலே சென்றான். மாதவியின் அறை எதிரில் போய் நின்று, 'அக்கா!' என்று கூப்பிட்டான்.

அக்கா ஏதோ வேலையில் ஆழ்ந்திருந்தாள். 'என் னடா?' என்றாள்.

'ஸார்...........'

அப்போது 'ஸாரும்' பிரமீளாவும் அறையில் நுழைந்துவிட்டார்கள். மாதவிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தலையில் 'முசுக்கை' இழுத்துப் போட் டுக்கொண்டு ஒரு மூலையில் போய் நின்றாள்.

'அக்கா! நீங்கள் இல்லாமல் நான் ரொம்பக் கஷ்டம்......' என்று சுரேந்திரன் ஆரம்பித்தான்.

மாதவி திரைக்குப் பின்னுல், உதட்டைக் கடித்துக்கொண்டு, மனத்திற்குள், 'சீச்சி' என்று முனகிக் கொண்டாள்.

'நீங்கள் போனதும்........'

மாதவி உள்ளுக்குள், 'அட பாவமே!' என்று கூறிக்கொண்டாள். ஆனுல் வெளியே மிருதுவான குரலில், 'பிரமீளா, ஸாரை வெளியே போகச் சொல்லு!' என்முள்.

பிரமீளா சின்னக் குட்டியானுலும் அக்காவின் நடத்தையைக் கண்டு தான் செய்தது தப்பு என்று தெரிந்துகொண்டு, 'வாருங்கோ, ஸார்!' என்று சொன்னுள்.

முதலில் அவன் கொஞ்ச நேரம் முழித்துக் கொண்டு நின்முன். பிறகு, 'வா, போகலாம்' என்று கிளம்பினுன். அவனுக்கு அதிகமாகப் பேசத் தெரியாது; பேச இஷ்டமுமில்லை. நாள் முழுவதும் மேகம் சூழ்ந்திருந்த பின் திடீரென்று சூரியன் கிளம்பினுல் எல்லாரும் அதையே பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள். அதைப் பார்க்கக் கூடாது, பார்த்தால் கண் கூசும் — வலிக்கும் என்றுகூட நினைத்துப் பார்க்க மாட்டார்கள். அது போலவே மேகம் சூழ்ந்த வானத்தடியில் ஒரு மாதம் தங்கியிருந்த சுரேந்திரன் சூரியோதயம் ஆனதும் அதைக் காணச் சென்முன்; ஆனுல் அது அப்படி முடிவுறும் என்று அவன் எதிர்பார்க்கவே யில்லை.

அன்றிருந்து அவனுக்குக் கிடைத்த ஆதரவு குறைந்துவிட்டது. மாதவியும் கொஞ்சம் வெட்கிப்

போய்விட்டாள்; ஏனென்ருல் பிந்துமதி அத்தை அந்த விஷயத்தைச் சொல்லி, கொஞ்சம் கேலிபண்ணி விட்டாள். சுரேந்திரனுக்குக்கூடக் கொஞ்சம் சங்கோசமாகத்தான் இருந்தது. 'அக்கா'வின் எல்லையற்ற அன்புக்கு வேலி போட்டுவிட்டது போல் அவனுக்குப் பட்டது. பழைய அக்காவின் ஆதரவுஇல்லை. பழைய அம்மாவின் அன்பில்லை. எல்லாம் எட்டியிருந்தே விலகிப் போய்க்கொண்டிருந்தன.

ஒரு நாள் அவன் பிரமீளாவிடம் கேட்டான்: 'அக்கா என் மேலே கோபமாக இருக்கிருளா?'

'ஆம்.'

'ஏன் அப்படி?'

'அன்றைக்கு நீங்கள் ஏன் அப்படி உள்ளே போகணும்?'

'போகப்படாதா என்ன?'

'எங்கேயாவது போகலாமோ! அக்காவுக்குக் கோபம் வந்துட்டுது.'

'அப்படியா?' என்று புஸ்தகத்தை மூடிக் கொண்டே சுரேந்திரன் கேட்டான்.

அப்புறம் ஒரு நாள் மப்புப் போட்டு நல்ல மழை பெய்தது. விரஜ பாபு இரண்டு நாளாக வீட்டில் இல்லை. தம் ஜமீன்தாரியைப் பார்க்கப் போயிருந்தார். மாதவிக்கு வேலை ஒன்றுமில்லை; பிரமீளாவும் வம்பு செய்துகொண்டிருந்தாள்.

'பிரமீளா, உன் புஸ்தகம் கொண்டு வா; எது வரைக்கும் படித்திருக்கிருய் என்று பார்க்கிறேன்...'

பிரமீளா அப்படியே வெலவெலத்துப் போய் விட்டாள்.

'கொண்டு வா!' என்ருள் மாதவி.

'ராத்திரி கொண்டு வர்ரேன்!'

'இல்லே, இப்பவே!'

ரொம்ப வருத்தத்துடன் பிரமீளா புஸ்தகத்தைக் கொண்டு வந்து சொன்னுள்: 'ஸார் எனக்கு ஒண்ணும் சொல்லித்தரதில்லே. அவர்தான் படிச்சிக்கிருர்.........'

மாதவி கேள்வி கேட்க ஆரம்பித்தாள். ஆரம்பத்திலிருந்து கடைசிவரை கேட்டு, வாஸ்தவமாகவே 'ஸார்' ஒன்றும் சொல்லித் தரவில்லை என்று அறிந்து கொண்டாள். பிரமீளாவுக்கு முந்தி கொஞ்ச நஞ்சம் தெரிந்திருந்தது கூட 'ஸார்' வந்தபின் மறந்து போய் விட்டது. மாதவி கோபமடைந்து பிந்துவைக் கூப்பிட்டு, 'பிந்து, ஸாரண்டை போய் பிரமீளாவுக்கு இத்தனை நாளாக ஏன் ஒன்றும் சொல்லித்தரவில்லை என்று கேட்டு வா!' என்ருள்.

பிந்து போன சமயம் ஸார் ஏதோ 'பிராப்ளம்' ஒன்றைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

'ஸார், நீங்கள் பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லித் தரவில்லை என்று அக்கா கேட்கிருள்.'

ஆனல் ஸாருக்கு ஒன்றும் கேட்கவில்லை. பிந்து மறுபடியும் 'ஸார்!' என்று உரக்கக் கூப்பிட்டாள்.

'என்ன?'

'அக்கா கேட்கிருள்!'

'என்னது?'

'பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லித் தரவில்லே?'

ஸாருக்கு எங்கோ ஞாபகம். 'பிடிக்கவில்லை' என்று சொல்லிவிட்டார்.

பிந்து அப்படியே மாதவியிடம் போய்ச் சொல்லி

விட்டாள். மாதவிக்கு இன்னும் கோபம் வந்துவிட்டது. அவள் கீழே இறங்கி வந்து, கதவின் பின்னுல் நின்றுகொண்டு பிந்து மூலம் கேட்டாள்: 'பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை?'

இரண்டு மூன்று தடவை கேட்ட பின் அவன் பதில் அளித்தான்: 'என்னுல் சொல்லித்தர முடியாது!'

'பின் எதுக்காக நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்?' என்ருள் பிந்து.

'இருக்காமல் என்ன செய்வது?'

'அப்படியானுல் ஏன் சொல்லித் தரவில்லை?'

சுரேந்திரனுக்கு உணர்வு வந்துவிட்டது. திரும்பி உட்கார்ந்து, 'என்ன கேட்டாய்?' என்ருன்.

பிந்து முன்னுல் சொன்னதை மறுபடி சொன்ஞள்.

'அவள் தினம் படிக்கிருளே!'

'அவள் படிக்கிறது இருக்கட்டும். நீங்கள் ஒன்றும் கவனிப்பதில்லையா?'

'இல்லை, எனக்கு அவகாசம் இல்லை.'

'அப்படியானுல் இந்த வீட்டில் எதுக்காக இருக்கிறீர்கள்?'

சுரேந்திரன் மெளனமாக அதைப் பற்றின யோசனையில் ஆழ்ந்தான்.

'அப்படியானுல் நீங்கள் சொல்லித்தர முடியாதா?'

'இல்லை, எனக்குப் பிடிக்கவில்லை.'

உள்ளேயிருந்து மாதவி கேட்டாள்: 'சரி, பிந்து! இத்தனை நாள் இங்கேயே ஏன் இருக்கிருர் என்று கேளு.'

பிந்து கேட்டாள். சுரேந்திரனின் யோசனை எல்லாம் கலைந்துவிட்டது. கொஞ்சம் யோசித்துப் பதில் சொன்னான்: 'அப்படியா? தவறுதலாக இருந்துவிட்டேன்!'

'நாலு மாசமாகவா தவறுதல்?'

'ஆமாம்; நான் இதைப்பற்றி யோசிக்கவில்லை.'

மறு நாள் பிரமீளா படிக்க வரவில்லை. சுரேந்திரனும் அதிகமாக அதைக் கவனிக்கவில்லை. மூன்றாவது நாளும் வரவில்லை; அன்றும் அப்படியே கழிந்துவிட்டது.

நாலாவது நாளும் அவள் வராமல் இருக்கவே, அவன் ஒரு வேலைக்காரனிடம் அவளைக் கூட்டி வரும்படி சொல்லி அனுப்பினான்.

வேலையாள் திரும்பி வந்து, 'இனி அவள் உங்களண்டை படிக்க மாட்டாளாம்!' என்றான்.

'வேறு யாரண்டை படிப்பாள்?'

வேலைக்காரன் கொஞ்சம் மூளையைச் செலவழித்து, 'வேறே வாத்தியார் வருவார்' என்றான்.

அப்போது ஒன்பது மணி ஆகியிருந்தது. சுரேந்திரன் கொஞ்ச நேரம் யோசித்துக்கொண்டிருந்தான். பிறகு நாலைந்து புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றான். மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கூட்டில் வைத்து மூடி, மேஜை மீது வைத்துவிட்டு, மெதுவாக அங்கிருந்து புறப்பட்டான்.

'ஸார், இந் நேரத்தில் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டான் வேலைக்காரன்.

'நான் போய்விட்டேன் என்று அக்காவிடம் சொல்லு.'

'திரும்பி வரமாட்டீர்களா?'

ஆனால் சுரேந்திரன் அதைக் கேட்கவில்லை. பதி லளிக்காமலே வாசலைத் தாண்டிப் போய்விட்டான். மணி இரண்டு அடித்தும் அவன் திரும்பி வராமல் போகவே வேலைக்காரன் மாதவியிடம் போய், 'ஸார் போய்விட்டார்!' என்றான்.

'எங்கே போய்விட்டார்?'

'எனக்குத் தெரியாது. ஒன்பது மணிக்குப் போனவர்தான். போகிற சமயம், "அக்காவிடம் நான் போய்விட்டேன் என்று சொல்" என்று சொன்னார்.'

'என்னடா அது? ஒன்றுமே சாப்பிடவில்லையா?'

மாதவி சுரேந்திரனின் அறையைப் போய்ப் பார்த் தாள். சாமான்கள் எல்லாம் அப்படியே கிடந்தன. மேஜை மீது மூக்குக்கண்ணாடிக் கூடு கிடந்தது. சில புஸ்தகங்களை மாத்திரம் காணோம்.

சாயங்காலம் ஆயிற்று. இரவாயிற்று. ஆனால் சுரேந்திரன் வரவில்லை. மறு நாள் மாதவி இரு வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, ஸாரைக் கண்டுபிடிப் பவனுக்குப் பத்து ரூபாய் பரிசு தருவதாகச் சொன் னாள். பரிசுக்கு ஆசைப்பட்டு எல்லோரும் தேடப் போனார்கள்; ஆனால் மாலையானதும் திரும்பி வந்து கைவிரித்துவிட்டார்கள்.

பிரமீளா அழுதுகொண்டே, 'அவர் ஏன் போய் விட்டார்?' என்று கேட்டாள்.

மாதவி அவளைத் தள்ளி, 'வெளியே போ, அழாதே!' என்று சொன்னாள்.

இரண்டு மூன்று என்று நாள் கழிந்துகொண்டே யிருந்தது. மாதவிக்கும் கவலை அதிகமாகிக்கொண் டிருந்தது.

'அவனுக்காக ஏனம்மா இவ்வளவு கவலை? கல்

கத்தாவிலே வேறே வாத்தியார் கிடைக்க மாட்டாரா?' என்று கேட்டாள் பிந்து.

'சீ, போ! ஒரு மனுஷன், கையிலே பைசா கூட இல்லாமல், கிளம்பிப் போய்விட்டான். நீ வந்து என்ன கவலை என்று கேட்கிருயே!'

'அவனண்டை பைசா கூட இல்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?'

'எனக்கு எல்லாம் தெரியும். அதைப்பற்றி உனக்கு என்ன கவலை?'

பிறகு பிந்து பேசவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக ஏழு நாட்கள் ஆகிவிட்டன. ஆனால் அவன் வராமல் போகவே, மாதவிக்கு ஒரே ஏக்கமாகிவிட்டது. அவளுக்குச் சோறு ஜலம் ஒன்றுமே பிடிக்கவில்லை. சுரேந்திரன் பசியால் வாடுவது போல் அவளுக்குப் பட்டது. வீட்டில் இருப்பதைக் கேட்டு வாங்கிக்கொள்ளத் தெரியாதவன் வெளியில் போய் எப்படிக் கேட்டுச் சாப்பிடுவான்? அவனிடம் வாங்கித் தின்னக் காசுமில்லை; பிச்சை கேட்கத் தைரியமும் இல்லை. ஆகையால் அவன் குழந்தை போல் எங்காவது கிடந்து அழுதுகொண்டிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் ஏதாவது மரத்தடியில் புஸ்தகங்களைத் தலையணையாக வைத்துத் தூங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் அவள் யோசித்தாள்.

திரும்பி வந்த விரஜ பாபு எல்லா விஷயங்களையும் கேட்டு, மாதவியிடம் கொஞ்சம் வருத்தப்பட்டுக் கொண்டார்.

மாதவி என்ன செய்வாள்? கலங்கிக் கண்ணீர் விட்டாள்.

வெளியே சுரேந்திரன் தெருவில் திரிந்துகொண்டிருந்தான். மூன்று நாள் வரை அவன் ஒன்றும் சாப்பிடாமலேயே கழித்துவிட்டான். குழாய் ஜலத்துக்குக் காசு தேவையில்லை யாகையால் பசிக்கும் போது வயிறு நிறையத் தண்ணீர் குடிப்பான்.

ஒரு நாள் ராத்திரி ரொம்பவும் வாடிப்போய் 'காளி கட்ட'த்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்; அங்கே சாப்பிடக் கிடைக்கும் என்று யாரோ சொன்னார்கள். இருண்ட இரவு; ஆகாசம் மப்பாக இருந்தது. முச்சந்தியில் அவன் மீது ஒரு வண்டி ஏறிவிட்டது. வண்டிக்காரன் எப்படியோ குதிரையை அடக்கிப் பிடித்துவிட்டான். அதனால் சுரேந்திரனுடைய உயிர் தப்பியது; ஆனால் மார்பிலும் இடுப்பிலும் சரியான காயம் பட்டு மூர்ச்சையாகி விழுந்துவிட்டான். போலீஸ்காரர்கள் அவனை வண்டியில் ஏற்றி உட்காரவைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

நாலைந்து நாளுக்குப் பிறகு ஒரு நாள் மூர்ச்சை தெளிந்ததும் அவன் கண்களைத் திறந்து, 'அக்கா!' என்றான்.

அன்று இரவு வைத்தியக் கல்லூரி மாணவன் ஒருவன் நோயாளரைக் கவனித்து வந்தான். சுரேந்திரன் 'அக்கா' என்றதைக் கேட்டு அவன் அருகில் வந்து நின்றான்.

'அக்கா வந்திருக்கிறாளா?' என்று சுரேந்திரன் கேட்டான்.

'நாளைக்குக் காலையில் வருவாள்.'

மறு நாள் சுரேந்திரனுக்குப் பிரக்ஞை வந்தது.

ஆனால் அக்காவைப் பற்றி ஒன்றும் கேட்க வில்லை. அன்று நல்ல ஜுரம் அடித்து அவனைத் துடிக்க வைத்துவிட்டது. சாயங்காலம் அவன் 'நான் ஆஸ்பத்திரியிலா இருக்கிறேன்?' என்று பக்கத்தி லிருந்த ஒருவனிடம் கேட்டான்.

'ஆம்.'

'ஏன்?'

'நீங்கள் வண்டியில் மாட்டிக்கொண்டு விட்டீர் கள்.'

'பிழைப்பேன் என்று நம்பிக்கை இருக்கிறதா?'

'கட்டாயம் பிழைத்துவிடலாம்.'

மறு நாள் அதே மாணவன் அவன் அருகில் வந்து நின்று, 'இங்கே உங்களுக்கு வேண்டியவர்கள் யாரா வது இருக்கிறார்களா?' என்று கேட்டான்.

'யாரும் இல்லை.'

'அன்றைக்கு ராத்திரி "அக்கா" என்று யாரை யோ கூப்பிட்டீர்களே? அவர்கள் இங்கேதான் இருக் கிறார்களா?'

'ஆம்; ஆனால் அவள் வர முடியாது. என் தகப் பனாருக்குத் தகவல் தெரிவிப்பீர்களா?'

'தெரிவிக்கிறேன்.'

சுரேந்திரன் தன் தகப்பனாரின் விலாசத்தைத் தெரிவித்தான். அந்த மாணவன் அன்றே அவருக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டான். பிறகு 'அக்கா' யார் என்று அறிவதற்காகக் கேட்டான். 'பெண் பிள்ளைகள் இங்கே வர வேண்டும் என்றால் தாராள மாக வரலாம். நாங்கள் அதற்காக ஏற்பாடு செய் கிறோம். உங்களுடைய அக்காவின் விலாசம் தெரி வித்தால் அவருக்கும் விஷயம் தெரிவிக்கிறோம்.'

சுரேந்திரன் கொஞ்சம் யோசித்து, விரஜ பாபு வின் விலாசத்தைச் சொல்லிவிட்டான்.

'என் வீடும் விரஜ பாபுவின் வீட்டருகில்தான். இன்றைக்கு அவரிடம் போய் விஷயத்தைச் சொல்லு கிறேன். இஷ்டப்பட்டால் பார்க்க வருவார்.'

சுரேந்திரன் ஒன்றும் சொல்லவில்லை. 'அக்கா எங்கே வரப் போகிறுள்!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். ஆனுல் மாணவன் தயவு புரிந்து விரஜ பாபுவிடம் விஷயத்தைச் சொல்லிவிட் டான். அவர் திடுக்கிட்டு, 'பிழைத்துவிடுவான் அல் லவா ?' என்று கேட்டார்.

'கட்டாயம் பிழைததுவிடுவார்!'

வீட்டிற்குள் போய் அவர் தம் மகளிடம், 'மாதவி! சுரேந்திரன் வண்டியில் அகப்பட்டு, ஆஸ் பத்திரியில் கிடக்கிருனும்!' என்ருர்.

மாதவியின் அங்கங்கள் எல்லாம் உடனே சிலிர்த் தன.

'அவன் உன் பெயர் சொல்லி "அக்கா!" என்று கூப்பிட்டாளும். பார்க்க வருகிருயா ?'

அதே சமயம் அடுத்த அறையில் பிரமீளா ஏதோ சாமானைக் கீழே போட்டதால் பலத்த சப்தம் உண்டாகியது. மாதவி அங்கே ஓடிப் போனுள். வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்து, 'நீங்கள் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்; நான் வரவில்லை!' என்று சொல்லிவிட்டாள்.

விரஜ பாபு வருத்தச் சிரிப்புடன், 'அவன் காட்டு மிருகம் போன்றவன்; அவன் மீது கோபம் கொள்ள லாமோ ?' என்று சொன்னுர்.

ஆனுல் மாதவி பதில் அளிக்கவில்லை. விரஜ பாபு

தனியாக சுரேந்திரனைப் பார்க்கப் போனார். பார்த்து மிகவும் துக்கம் அடைந்தார்.

'சுரேந்திரா! உன் பெற்றோருக்கு விஷயம் தெரிவித்தால் என்ன?'

'தெரிவித்தாகிவிட்டது.'

'ஒன்றுக்கும் பயப்படாதே. அவர்கள் வந்ததும் நான் எல்லா ஏற்பாடும் செய்கிறேன்.'

பணம் இல்லாமல் அவர்கள் வரத் தடைப்படுமோ என்று யோசித்து அவர் சொன்னார்: 'அவர்களுடைய விலாசத்தை என்னிடம் சொல்லேன். அவர்கள் வருவதற்குச் சிரமமாக இருந்து வர முடியாமல்........'

ஆனால் சுரேந்திரன் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், 'அப்பா வருவார்; அதில் சிரமம் என்ன?' என்றான்.

விரஜ பாபு வீட்டுக்குத் திரும்பி மாதவியிடம் எல்லா விஷயங்களையும் சொன்னார்.

அன்றிருந்து அவர் தினம் சுரேந்திரனைப் பார்க்கப் போக ஆரம்பித்தார். அவருக்கு அவன்மீது பற்றுதல் உண்டாகிவிட்டது. ஒரு நாள் வீட்டிற்குவந்து, 'மாதவி! நீ சொன்னது ரொம்ப சரி; சுரேந்திரனுடைய அப்பா பெரிய பணக்காரர்!' என்றார்.

மாதவி ஆச்சரியம் அடைந்து, 'எப்படித் தெரிந்தது?' என்று கேட்டாள்.

'அவர் பெரிய வக்கீல்; நேற்று ராத்திரி வந்துவிட்டார்!'

மாதவி மௌனமாக இருந்தாள்.

அவன் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்துவிட்டானும்.'

'ஏன்?'

'அவனுடைய அப்பா எல்லா விஷயமும் சொன்னார். இந்த வருஷம் மேற்கே உள்ள ஒரு சர்வகலா சாலையில் ரொம்ப கௌரவத்துடன் எம். ஏ. பாஸ் செய்தானும். சீமைக்குப் போகவேணும் என்றானும். மறதியுள்ள பையனுச்சே என்று அப்பா மறுத்துவிட்டாராம். அவன் கோபமாக ஓடி வந்துவிட்டான். உடம்பு சரியானதும் அவர் அவனைக் கூட்டிக் கொண்டு போவார்.'

பெருமூச்சை அடக்கி, துளிர்க்கும் கண்ணீரைத் தடுத்துக்கொண்டே, மாதவி, 'அது தான் சரி!' என்றாள்.

ஆரும் அத்தியாயம்

சுரேந்திரன் வீட்டிற்குப் போய் ஆறு மாசம் ஆகிவிட்டது. இதற்கிடையில் மாதவி மனோரமாவுக்கு ஒரு முறைதான் கடிதம் போட்டாள்; பிறகு போடவில்லை.

துர்க்கா பூஜை சமயத்தில் மனோரமா தன் பிறந்தகம் வந்தாள். மாதவியிடம், 'நீ வளர்க்கிற ஹனுமந்தரைக் காட்டு, காட்டு!' என்று 'நச்சரித்து' வந்தாள்.

'குரங்குக்காக நான் எங்கே போகிறதடீ!' என்ருள் மாதவி. மனோரமா அவளுடைய மோவாயைப் பிடித்துக்கொண்டு பாடத் துவங்கினுள்:

'உன் குரங்கைக் காட்டுவாய் நீ!
காண ஆவல் கொண்டு துடிக்கிறேன் நான்!—
உன்னுடைய செம்பாதங்களில்,
எவ்வளவு அழகாயிருக்கும் அது!—
நீ வளர்த்தாயே அந்தக் குரங்கு எங்கே?'

'எப்போது?'

'ஞாபகமில்லையா? அதுதான், உன்னைத் தவிர வேறே யாரையும் அறியாதது!'

மாதவிக்கு முதலிலேயே தெரிந்துவிட்டது. அதனுல்தான் அவளுடைய முக நிறம் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. ஆனுலும் மனத்தை அடக்கிக்கொண்டு, 'ஓஹோ! அவரையா சொல்லுகிருய்? அவர்தான் தாமாகப் போய்விட்டாரே!' என்ருள்.

'இவ்வளவு அழகிய பாத கமலங்கள் கூடவா அவருக்குப் பிடிக்கவில்லை?'

மாதவி பதிலளிக்காமல் முகம் திருப்பிக் கொண் டாள். மனோரமா மிகவும் மரியாதையுடன் அவளு டைய முகத்தைத் திருப்பினாள். அவள் பரிகாசம்தான் செய்துகொண் டிருந்தாள் ; ஆனால் மாதவியின் கண் களில் நீர் நிறைவதைக் கண்ட அவளுக்குத் தாங்க முடியாத ஆச்சரியம் உண்டாகிவிட்டது.

'மாதவி, இதென்னடி ?'

இன்னும் மாதவியால் சமாளிக்க முடியவில்லை. முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம் பித்தாள்.

மனோரமாவுக்கு ஒரே ஆச்சரியம் ஆகிவிட்டது. மாதவியை எப்படித் தேற்றுவ தென்றும் அவளுக் குத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் அழும்படி விட் டாள். பிறகு தானாக அவளுடைய முந்தானையை இழுத்துவிட்டு வருத்தத்துடன் கேட்டாள்: 'இந்தச் சின்னப் பரிகாசத்தைக் கூடவா உன்னால் பொறுக்க முடியவில்லை ?'

மாதவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'நான் விதவை அல்லவா !' என்றாள்.

பிறகு இருவரும் நெடுநேரம் மௌனமாக இருந் தனர். இருவருமே மௌனமாக அழத் தொடங்கினர். மாதவி - ஒரு கைம்பெண் - கஷ்டப்படுகிறாளே என்று மனோரமா அழுதுகொண்டிருந்தாள். ஆனால் மாதவி அழுத காரணம் வேறு. மனோரமா ஒன்றும் அறி யாது, 'உன்னைத் தவிர வேறு யாரையும் அவனுக்குத் தெரியாது' என்று வேடிக்கையாகச் சொன்ன தைப்பற்றி அவள் யோசித்துக்கொண் டிருந்தாள். மனோரமா சொன்னது சரி என்று அவள் அறி வாள்.

வெகு நேரம் கழித்து மனோரமா, 'காரியமே கெட்டுப் போச்சு!' என்றாள்.

'எந்தக் காரியம்?'

'அதைக் கூட நான் சொல்ல வேணுமா? எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது!'

ஆறு மாசமாக மிகவும் கஷ்டப்பட்டு மாதவி மறைத்து மறைத்து வைத்துக்கொண்டிருந்த விஷயத்தை மனோரமாவிடம் மறைக்க முடியவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட அவள் குழந்தை போல் மறுபடியும் அழுதாள்.

கடைசியில் மனோரமா, 'ஆனால் அவர் ஏன் போய்விட்டார்?' என்று கேட்டாள்.

'நான்தான் போகச் சொன்னேன்—'

'ரொம்பப் புத்திசாலித்தனமான வேலைதான்—'

மனோரமா ஒன்றுமே புரிந்துகொள்ளவில்லை என்று மாதவி நினைத்துக்கொண்டாள். ஆகையால் அவள் மெதுவாக எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொன்னாள். அப்புறம், 'அவர் மாத்திரம் பிழைத்திருக்கா விட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துப் போயிருக்கும்!' என்றாள்.

'இப்போது மாத்திரம் பிடிக்கவில்லையாக்கும்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் மனோரமா.

அன்று மிகுந்த வருத்தத்துடன் மனோரமா வீட்டுக்குத் திரும்பினாள். ராத்திரியே தன் கணவருக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

'ஸ்திரீகளை நம்பக் கூடாது என்று தாங்கள் சொன்னது மிகவும் சரி. நான் இன்று அதை ஏன் சொல்லுகிறேன் என்றால், மாதவி அதை எனக்குக் கற்பித்துவிட்டாள். குழந்தைப் பருவத்திலிருந்தே

நான் அவளை அறிவேன். அவளைக் குற்றம் சொல்ல எனக்கு மனசு வரவில்லை; தைரியமும் வரவில்லை. அதற்காக நான் ஸ்திரீ ஜாதி முழுவதையும், பகவானையும் குற்றம் சாட்டுகிறேன். அவர் இவ்வளவு மிருதுவான, ஜலம் போன்ற திரவ பதார்த்தத்தால் பெண்ணின் ஹிருதயத்தை ஏன் செய்தார்?

'அந்த ஹிருதயத்தில் இவ்வளவு அன்பை நிறைக்கும்படி அவரை யார் வேண்டிக்கொண்டார்கள்? "அவர்களுடைய" ஹிருதயங்களை இன்னும் கொஞ்சம் கெட்டியாகப் படைக்கும்படி நான் அவரைப் பிரார்த்திக்கிறேன். தங்களுடைய சரணாரவிந்தத்தில் தலையை வைத்து, தங்கள் முகத்தைத் தரிசித்தபடியே உயிர் துறக்க முடியவேண்டும் என்று தங்களைப் பிரார்த்திக்கிறேன். மாதவியைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் நான் கொண்டிருந்த கொள்கைகள் எல்லாவற்றையும் அவள் அழித்துவிட்டாள். என்னையும் அதிகமாக நம்ப வேண்டாம். சீக்கிரம் வந்து அழைத்துக் கொண்டு செல்லுங்கள்.'

A·4090

கணவருடைய பதில் வந்தது.

'அழகுள்ளவன் அதை வெளியில் காட்டிக் கொள்ளத்தான் செய்வான்; குணமுள்ளவன் அதை வெளிப்படுத்தத்தான் செய்வான்; காதல் நிறைந்த நெஞ்சுள்ளவன்-காதலிக்கத் தெரிந்தவன்-காதலிக்கத் தான் செய்வான்! மாதவிக் கொடி மாமரத்தில் படர்ந்துதான் வாழும். இது லோக ரீதி. அதற்கு நீயும் நானும் என்ன செய்ய முடியும்? உன் மீது எனக்கு ஏராளமான நம்பிக்கை இருக்கிறது. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்.'

மனோரமா தன் கணவருடைய கடுதாசியை நெற்றியில் ஒற்றிக்கொண்டு அவரை நினைத்து நமஸ்காரம் செய்து எழுதினாள்.

'எரிமூஞ்சி மாதவி!—விதவை செய்யக்கூடாத காரியம் செய்துவிட்டாள். தன் மனசால் இன்னொருவனை யல்லவா நேசித்துவிட்டாள்!'

கடிதத்தைப் படித்த அவள் புருஷர் மனத்திற்குள் சிரித்துக்கொண்டார். பரிகாசமாகப் பதில் எழுதினார் :

'மாதவி எரிமூஞ்சி என்பதில் சந்தேகமே யில்லை; ஏனென்றால் கைம்பெண்ணாக இருந்தும் அவள் இன்னொருவனை நேசித்துவிட்டாள். அவள் செய்த காரியம் உங்களுக்குக் கோப மூட்டத்தான் செய்யும்; ஏனென்றால் அமங்கலியான அவள் சுமங்கலியான உங்களுடைய உரிமையில் அல்லவா கை போட்டுவிட்டாள்! நான் உயிரோடு இருக்கும் வரை நீ கவலைப்பட வேண்டாம்; இம்மாதிரி சந்தர்ப்பத்தை நீ இழந்துவிட வேண்டாம். இருந்த சிறு காலத்திற்குள் நீ இன்னொருவனைத் தாராளமாக நேசிக்கலாம்! ஆனால் மனோரமா, உன்னால் என்னை மயக்க முடியவில்லை என்பதை நீ அறிவாயா? நான் ஒரு முறை ஒரு கொடியைப் பார்த்தேன். அது அரைக் குரோச தூரம் வரை தரையிலேயே படர்ந்து ஒரு மரத்தைத் தொத்திக்கொண் டிருந்தது. அதில் இப்போது எத்தனை இலைகளும் மலர் மொட்டுகளும் துளிர்களும் இருக்கின்றனவோ! நீ இங்கே வந்ததும் இருவரும் போய் அதைப் பார்க்கலாம்'

மனோரமா கோபம் அடைந்து அதற்குப் பதில் ஒன்றும் எழுதவில்லை.

ஆனால் மாதவியின் கண்களுடைய கீழ்ப்பாகம் கறுத்துவிட்டது. மலர்ந்திருக்கும் அவளுடைய முகம் கம்பீர மாகிவிட்டது. முன் போல் அவளுக்கு வேலையில் ருசி இல்லை; ஏதோ சோர்வு உண்டாகி விட்டது. முன்னைவிட அதிகமாகத்தான் அவள் எல்லோரையும் கவனித்து வருகிறாள். ஆனால் முன் போல் எல்லா விஷயங்களும் ஞாபகம் இருப்பதில்லை; நடு நடுவில் மறந்து போய்விடுகின்றன.

இப்போதுகூட அவளை எல்லோரும் 'அக்கா' என்கிறார்கள். எல்லோரும் அந்தக் கற்பக தருவையே நாடுகிறார்கள்; அதன் முன்னிலையில் கைகளை நீட்டித் தேவையானதைப் பெறுகிறார்கள். ஆனால் அந்த விருக்ஷம் முன்போல் ஸ்வாரஸ்யமாக இல்லாததைக் கண்டு அது எங்கே உலர்ந்துவிடப் போகிறதோ என்று எல்லோருக்கும் பயம் உண்டாகிவிட்டது.

மனோரமா தினம் வருகிறாள். சுரேந்திரன் விஷயமாக அவர்கள் எப்போதும் பேசுவதில்லை; இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பேசுகிறார்கள். அதைப் பற்றிப் பேசுவதால் மாதவிக்கு வருத்த முண்டாகும் என்று அவளுக்குத் தெரியும்; ஆகையால் முடிந்த வரை அந்தப் பேச்சை அவள் எடுப்பதில்லை. 'மாதவி இதை மறக்க மாட்டாளா?' என்றுகூட அவள் ஏங்கியது உண்டு.

* * *

சுரேந்திரன் சௌக்கியமாகி, தன் தகப்பனாரோடு வீட்டுக்குப் போய்விட்டான். மாற்றாந்தாய் பழைய 'கெடுபிடி'யைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டாள். அதனால் அவனுடைய உடம்புக்குக் கொஞ்சம்

சுகம் கிடைத்தது. ஆனால் அது சரிவரக் குணமாக வில்லை; உடம்பில் ஏதோ கோளாறு இருந்துகொண் டிருந்தது. அழகையோ இளமையையோ பற்றி யோசிக்க அவனுக்கு இன்னும் புத்தி வரவில்லை. முன் போலவே இப்போதும் மறதியுள்ளவனாகவே இருக் கிறான்; முன்னைப் போலவே தன்னையே நம்பி வாழ அவனுக்குத் தெரியாது; யாரைத் தாங்கி வாழ வேணும் என்றும் அவனுக்குத் தெரியாது; தெரியாத தால் தன் வேலைகளைத் தானே செய்துகொள்ளுகிறானா என்றால் அதுவும் கிடையாது; முன் போலவே ஒவ்வொரு காரியமும் இன்னொருவன் ஒத்தாசை யைக் கொண்டுதான் செய்யவேண்டி யிருக்கிறது. ஆனால் முன்போல் அவன் மனசு சரியாக இல்லை; அவ னுக்கு எதுவும் பிடிக்கவில்லை. ஒவ்வொன்றிலும் ஏதாவது குற்றம் தோன்றிக்கொண்டே இருக்கிறது. அதை யெல்லாம் பார்த்து அவனுடைய சிற்றன்னை, 'இப்போது சுரேந்திரன் முன்னைப் போல இல்லை; ரொம்ப மாறிப் போய்விட்டான்' என்று கூறு கிறாள்.

நடுவில் ஒரு நாள் அவனுக்கு ஜுரம் அடித்து மிகவும் கஷ்டப்பட்டான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அதைக் கண்டதும் அருகிலேயே உட்கார்ந்திருந்த அவனுடைய சித்தி யின் கண்களிலும் நீர் நிறைந்துவிட்டது. அவள் அன்புடன் அவனுடைய கண்களைத் துடைத்துக் கொண்டே, 'ஏன், என்ன விஷயம் அப்பா?' என்று கேட்டாள்.

சுரேந்திரன் பேசவில்லை. பிறகு அவன் ஒரு போஸ்ட் கார்டு கேட்டு வாங்கிக்கொண்டான். அதில்

கோணலும் மாணலுமாக, 'அக்கா, எனக்கு ஜுரம் அடிக்கிறது; ரொம்பவும் கஷ்டப்படுகிறேன்' என்று எழுதினான்.

ஆனால் அந்தக் கடிதம் தபாலாபீஸுக்குப் போகவேயில்லை. கட்டிலிலிருந்து கீழே விழுந்த அதை வீடு கூட்டுகிறவன் ஆரஞ்சுப் பழத் தோடுகளோடும், பிஸ்கோத்துத் துண்டுகளோடும், திராட்சைப் பழச் சக்கைகளோடும் சேர்த்துக் கூட்டித் தள்ளிவிட்டான். சுரேந்திரனுடைய ஹிருதயத்தின் ஆசை புழுதியோடு கலந்து, காற்றில் பறந்து, பனியில் நனைந்து, கடைசியில் ஒரு நாவல் மரத்தடியிலேயே கிடந்துவிட்டது.

முதலில் 'பதில் வரும், வரும்' என்று நம்பிக் கொண்டிருந்தான். அவன், அக்காவின் கையெழுத்தைப் பார்க்கலாம் என்று ஆவலோடிருந்தான். ஆனால் பல நாளாகியும் பதில் வரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய ஜுரமும் இறங்கிவிட்டது; பத்தியத்துடன் அவன் எழுந்தான்.

பிறகு அவன் வாழ்க்கையில் ஒரு புதிய சம்பவம் நடந்தது. சம்பவம் புதிதானாலும் சர்வ சாதாரணமானதுதான். அவனுடைய தகப்பனார் அதைப் பல நாளாக அறிவார்; இப்படி நடக்கும் என்று நம்பிக்கை கொண்டுதான் இருந்தார்; சுரேந்திரனுடைய தாய் வழிப் பாட்டனார் பட்னா ஜில்லாவில் மத்திய வகுப்பைச் சேர்ந்த ஒரு ஜமீன்தார். இருபது இருபத்தைந்து கிராம ஜமீன்தாரி; வருஷ வருமானம் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் இருக்கும்; அவருக்குக் குழந்தையோ குட்டியோ ஒன்றும் இல்லை என்பதோடு ரொம்பவும் செட்டுக்காரர்; கருமி என்று கூடச்

சொல்லிவிடலாம். ஆகையால் தம்முடைய நீண்ட வாழ்நாளில் ஏராளமாகப் பணம் சேர்த்து வைத் திருந்தார். அவர் போய்விட்டால் அவருடைய சொத்தெல்லாம் ஒரே பேரனுன சுரேந்திரனைத் தான் சேரும் என்று அவன் தகப்பனுருக்குத் தெரி யும்; கடைசியில் அப்படியே நடந்தும்விட்டது. மாமனுர் சாகக் கிடக்கிருர் என்று சுரேந்திரனுடைய தகப்பனுருக்குத் தகவல் கிடைத்தது. உடனே அவர் மகனைக் கூட்டிக்கொண்டு பப்னுவுக்குப் புறப்பட்டார்: ஆனுல் அவர் அங்கே போய்ச் சேருவதற்குள் மாமனுர் சுவர்க்கத்திற்குப் புறப்பட்டுவிட்டார். அவருடைய கிரியைகளை எல்லாம் சுரேந்திரனுடைய தகப்பனுர் ஏக தடபுடலாகச் செய்தார்.

ஏற்கனவே துன்பப்பட்டுக்கொண்டிருந்த குடி கள் கைதேர்ந்த வக்கீலின் ஆட்சியில் இன்னும் கஷ் டத்திற்குள்ளாயினர்; அவர்களுக்குத் தலைவலி போய் மார்புவலி வந்தது போலிருந்தது!

இப்போது சுரேந்திரனுக்குக் கலியாணம் பண்ணி வைக்கவேண்டியதும் அவசியமாகிவிட்டது. கலியாணம் செய்விக்கிற நாவிதர்கள் வருவதும் போவதுமாகக் கிராமத்தில் எந்நேரமும் கூட்டமும் கூச்சலுமாக இருந்தது. ஐம்பது குரோச தூரத்திற் குள் எங்காவது ஒரு பெண் இருப்பதாகத் தகவல் எட்டினுல் போதும்; நாவிதர்கள் பெண் வீட்டில் எழுந்தருளிவிடுவார்கள். பெண்ணைப் பெற்றவர் களின் வயிற்றில் பால் வார்ப்பதாகச் சொல்லிவிட்டுத் திரும்புவார்கள்.

இம்மாதிரி அமர்க்களத்தில் நாலைந்து மாதம் ஆகி விட்டது.

கடைசியில் மாற்றாந்தாய் வந்தாள். அவளுடைய சொந்தக்காரர்கள் எல்லோரும் வந்தார்கள். வீட்டில் பந்துக்கள் ஏகமாகக் கூடிவிட்டார்கள்.

பிறகு ஒரு நாள் காலையில் மேள தாளங்களின் முழக்கத்திற்கும் கரகோஷத்திற்கும் நடுவில் சுரேந்திரனுக்குக் கலியாணம் ஆகிவிட்டது.

ஏழாம் அத்தியாயம்

சுமார் ஐந்து வருஷங்கள் கழிந்துவிட்டன.

சுரேந்திரனுடைய தகப்பனரும் விரஜ பாபுவும் காலமாகிவிட்டார்கள். அவனுடைய சிற்றன்னை தன் புருஷர் கொடுத்த சொத்தை வைத்துக்கொண்டு தகப்பனர் வீட்டில் வசித்துக் கொண்டிருந்தாள்.

சுரேந்திரனைப் பலர் புகழ்ந்துகொண்டிருந்தனர்; பலர் இகழ்ந்துகொண்டிருந்தனர். அவனுடைய பந்து வாத்சல்யத்தையும், தாராள குணத்தையும், நண்பரை ஆதரிக்கும் தன்மையையும் பார்க்கிறவர்கள் அவனைப் போன்ற உதார குணமுள்ள ஜமீன்தார் அந்தப் பக்கத்தில் இதுவரை தோன்றியதேயில்லை யென்று பேசிக்கொண்டார்கள். இன்னும் பலர் அவனைப் போன்ற கொடிய ஜமீன்தார் அந்தப் பக்கத்தில் பிறந்ததே யில்லை என்று சொல்லிக்கொண்டார்கள். இரண்டு தரப்பினரும் சொல்லுவது உண்மைதான். புகழ்ச்சி சுரேந்திரனுக்கு; இகழ்ச்சி அவனுடைய மானேஜர் மதுரா நாதருக்கு.

எப்போது பார்த்தாலும் சுரேந்திரன் வீட்டில் அவன் நண்பர்கள் 'கொம்மாளம்' அடித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் உலக இன்பத்தைத் தாராளமாக அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். வெற்றிலை, புகையிலை, சாராயம் என்ன வேண்டுமானாலும் சரி, உடனே கிடைத்துவிடும். மானேஜர் மதுரா நாதருக்கு அவை எல்லாம் நன்ருகப் பிடிக்கும்; செலவு செய்வதிலும் அவர் மிகவும் தாராளந்தான்; ஆனல்

அதனால் ஜமீன்தாருக்கு எவ்வித இடைஞ்சலும் உண்டாகாமல் பார்த்துக்கொள்வதிலும் கெட்டிக்காரர்; செலவின் பளுவையெல்லாம் குடிகள்மீது சுமத்துவது தான் அவருடைய ஆட்சியின் திறமை. மதுரா பாபு யாரிடமும் பைசாகூட நிலுவை விடமாட்டார். வீட்டை எரிப்பதிலும், குடிகளைக் கிராமத்திலிருந்து விரட்டுவதிலும், அவர்களைக் கச்சேரியின் சிறு அறையில் போட்டு மூடுவதிலும் அவருக்கு அலாதித் துணிவு, சந்தோஷம்.

குடிகளின் கூக்குரல் சில சமயம் சாந்தி தேவியின் காதுகளுக்கும் எட்டும். 'நீங்கள் ஜமீன்தாரியைப் பார்த்துக்கொள்ளாவிட்டால் எல்லாம் நாசமாய்ப் போய்விடும்' என்று சொல்லி அவள் தன் கணவனைத் தூண்டிவிடுவாள்.

சுரேந்திரன் திடுக்கிட்டவன் போல், 'அப்படியா! இதெல்லாம் நிஜம்தானா?' என்று கேட்பான்.

'பின்னே என்ன! எங்கே பார்த்தாலும் உங்களை ஏசிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத்தான் ஒன்றும் கேட்கவில்லை; இருபத்து நாலு மணி நேரமும் கூத்தடித்துக்கொண்டிருந்தால் எங்கே கேட்கும்? இப்பேர்ப்பட்ட மானேஜர் வேண்டாமே! அவனை எடுத்துவிடுங்கள்!'

'சரி, நாளை முதல் நானே எல்லாம் கவனித்துக் கொள்ளுகிறேன்' என்பான் சுரேந்திரன் வருத்தமாய்.

பிறகு கொஞ்ச நாள் வரை அமர்க்களப்படும். சுரேந்திரனே ஜமீன்தாரி வேலையெல்லாம் கவனிக்க ஆரம்பித்துவிடுவான். மதுரா பாபு திடுக்கிட்டுப் போவார்; சில சமயம், 'இப்படித்தான் ஜமீன்தாரியை வைத்துக்கொள்வதா?' என்று கேட்பார்.

சுரேந்திரன் உலர்ந்த சிரிப்புச் சிரித்து, 'மதுரா பாபு, ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி, ஜமீன்தாரி யைக் காப்பாற்றுவிட்டால் என்ன?' என்பான்.

'அப்படியானால் என்னை விட்டுவிடுங்கள்; நான் போகிறேன்' என்பார் மதுரர். உடனே சுரேந்திரன் வழிக்கு வந்துவிடுவான். மறுபடியும் பழைய குருடி தான். சமீபத்தில் ஒரு புதுக் காண்டம் ஆரம்பமாகி யது. ஒரு தோட்டம் வைத்தார்கள். அதன் நடுவில் ஒரு பங்களா; அதில் ஏலோகேசி என்று கல்கத்தா தாசி ஒருத்தி தங்கியிருந்தாள். ஆடலிலும் பாடலி லும் கெட்டிக்காரி. பார்க்கவும் நன்றாக இருந்தாள். கலைந்து போன தேன் கூட்டிலிருந்து தேனீக்கள் பறப்பது போல் சுரேந்திரன் வீட்டிலிருந்த 'மைனர் கள்' எல்லோரும் அவனுடைய வீட்டைவிட்டு ஏலோ கேசி அருகில் போய் மொய்த்துக்கொள்ள ஆரம்பித் தார்கள். அவர்களுடைய ஆனந்தத்தையும் உற்சாகத் தையும் சொல்லி முடியாது. அவர்கள் சுரேந்திரனை யும் அங்கே இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். சாந்தி தன் கணவனைக் கண்டே மூன்று நாள் ஆகி விட்டது. நாலாவது நாள் அவனைக் கண்டதும் அவள் கதவோடு சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள்.

'இத்தனை நாள் எங்கே போயிருந்தீர்கள்?'

'தோட்டத்துக்கு—'

'அங்கே யாருக்காக மூணு நாள் தங்கியிருந்தீர் கள்?'

'அப்படியா!—'

'என்ன கேட்டாலும் "அப்படியா!"—எனக்கு எல்லா விஷயமும் தெரிந்துவிட்டது!' என்று சொல் லும் போதே சாந்தி அழுதுவிட்டாள். 'நீங்கள் இப்

படி உதறித் தள்ள என்ன குற்றம் செய்துவிட்டேன் ?'

'எங்கே ? நான்—'

'உதறித் தள்ளுவதென்ருல் வேறே என்ன? நமக்கு இதைவிட வேறே அவமானம் வேணுமா ?'

'அப்பப்டியா !—அவர்கள்—'

சாந்தி அவன் சொன்னதையே கேட்கவில்லை போலிருந்தது ; அவள் இன்னும் அதிகமாக அழத் துவங்கிஞள்.

'நீங்கள்தான் எனக்குத் தெய்வம் ; எனக்கு ஸர்வமும் நீங்களே. உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? உங்களுடைய மனசை நான் ஒரு நாளும் பெறவில்லை. நான் உங்களுக்கு ஒரு பொருட்டாக இல்லை. என்னுடைய இந்த வேதனையை உங்களிடம் யார் சொல்லுவது ? உங்களுக்கு வெட்கம் உண்டாகும், வருத்தம் உண்டாகும் என்றுதான் நான் ஒன்றும் சொல்லவில்லை.'

'சாந்தி ! ஏன் அழுகிருய் ?'

'ஏன் அழுகிறேன் என்று கடவுளுக்குத்தான் தெரியும். நீங்கள் என்னை அலக்ஷியம் செய்யவில்லையென்றும் எனக்குத் தெரியும். உங்களுடைய மனசில்கூடக் கவலை இருக்கிறது. நீங்கள் வேறு என்ன செய்வீர்கள் !' அப்புறம் கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் சொன்ஞள் : 'நான் இருக்கிறவரைக்கும் கஷ்டப்பட்டாலும் படுகிறேன். ஆனுல் உங்களுடைய கஷ்டம் மாத்திரம் தெரிந்தால் '—

சுரேந்திரன் அவளைத் தன் அருகில் இழுத்தான் ; அன்புடன் அவளுடைய கண்ணீரைத் துடைத்து

விட்டுக் கேட்டான்: 'தெரிந்தால் என்ன செய்வாய் சாந்தி?'

இதுக்குக் கூடவா பதிலுண்டு? சாந்தி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

நெடு நேரம் கழித்துச் சாந்தி, 'உங்களுடைய உடம்பு கூட இப்போது சரியாக இல்லை' என்று சொன்னாள்.

'இப்போது என்ன, ஐந்து வருஷமாகவே சரியா யில்லை. கல்கத்தாவிலே வண்டியடியில் மாட்டிக் கொண்டு மார்பிலும் இடுப்பிலும் அடிபட்டு, ஒரு மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தேனே, அப்போ திருந்தே உடம்பு சரியாக இல்லை. அந்த வலி இன்று வரை போகவே யில்லை. எப்படி உயிரோடு இருக்கி றேன் என்றுகூட எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.'

சாந்தி உடனே அவன் மார்புமீது கை வைத் துச் சொன்னாள்: 'வாருங்கள்; நாம் இந்த ஊரை விட்டுக் கல்கத்தாவுக்குப் போவோம்; அங்கே நல்ல நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள்.'

'அக்காகூட அங்கே இருக்கிறாள், வா, போக லாம்!' என்றான் சுரேந்திரன் மகிழ்வடைந்து.

'எனக்கும் உங்களுடைய அக்காவைப் பார்க்க வேணும்போல் இருக்கிறது. அவளை அழைத்து வருவீர்களா?'

'அழைத்து வராமல் என்ன?' பிறகு கொஞ்சம் யோசித்துக் கூறினான்: 'அவள் கட்டாயம் வரு வாள்; நான் செத்துக்கொண் டிருக்கிறேன் என்று கேள்விப்பட்டால்—'

சாந்தி அவனுடைய வாயை மூடிக்கொண்டே சொன்னாள்: 'நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்

கொள்ளுகிறேன்; இப்படி எல்லாம் பேச வேண்டாம்—'

'அவள் வந்துவிட்டால் எனக்குக் கவலையே இல்லை—'

அபிமானத்தால் சாந்தியின் தலை நிமிர்ந்துவிட்டது. கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் அவள், 'உங்களுக்கு நான் ஒரு பொருட்டாக இல்லை' என்று சொன்னாள்; இப்போது அவளுக்குத் தான் 'ஒரு பொருட்டு' ஆகிவிட்டாற் போல் இருந்தது! ஆனால் தன் பேச்சால் அவளுக்கு மிகவும் சந்தோஷமும் உண்டாகிறது என்று சுரேந்திரன் உணரவேயில்லை. 'நீயே போய் அக்காவைக் கூட்டிக்கொண்டு வர வேண்டும்; என்ன?' என்றான்.

சாந்தி தலையை ஆட்டினாள்.

'அவள் வந்ததும் பார்; எனக்கு ஒரு கஷ்டமும் இருக்காது!'

சாந்தியின் கண்களிலிருந்து நீர் பெருக ஆரம்பித்தது.

* * *

மறுநாள் வேலைக்காரி மூலம் மதுரா பாபுவிடம், அந்தத் தோட்டத்துப் பிராணியை வெளியேற்றி விட்டால் அவர் வெளியேற்றப் படுவார் என்று சொல்லி அனுப்பினாள் சாந்தி. தன் புருஷனையும் கோபித்துக் கொண்டாள்: 'நீங்கள் மாத்திரம் வீட்டை விட்டு வெளியில் கால் எடுத்து வையுங்கள்; நான் சுவரில் மண்டையை மோதிக்கொண்டு செத்துவிடுவேன்-ஆமாம்!'

'சரி, ஆனால்—'

'ஆனால் என்ன, ஆனால்? நான் அதுக்கும் ஏற்பாடு செய்கிறேன்.'

பிறகு சாந்தி வேலைக்காரியைக் கூப்பிட்டு, அந்தப் போக்கிரிப் பயல்கள் வந்தால் உள்ளே விடாதே என்று காவல்காரனிடம் சொல்லு—' என்று கட்டளையிட்டாள்.

வேறு வழி இல்லாமல் மதுரா பாபு ஏலோகேசிக்குச் சீட்டுக் கொடுக்கவேண்டியதாயிற்று; மைனர்களையும் வழியனுப்ப வேண்டியதாயிற்று. அப்புறம் மதுரா பாபு ஜமீன்தாரி வேலையில் கவனம் செலுத்தினார்.

சுரேந்திரன் கல்கத்தா போகவில்லை. மார்புவலியும் குறைந்தாற் போலிருந்தது. சாந்திக்கும் கல்கத்தா போகவேணும் என்ற ஆசை இல்லை. அங்கேயே இருந்துகொண்டு தன் பர்த்தாவுக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்துவந்தாள். கல்கத்தாவிலிருந்து ஒரு நல்ல டாக்டரை வரவழைத்து அவனைக் காட்டினாள். அவர் பார்த்து ஏதோ மருந்து கொடுத்தார். நெஞ்சு அப்போது இருந்த நிலையில் அவனுடைய உடம்புக்கோ மனசுக்கோ எவ்விதக் கஷ்டமும் கொடுக்கக் கூடாது என்று எச்சரித்தார் அவர்.

சந்தர்ப்பத்தை ஒட்டி மதுரா பாபு செய்து வந்த வேலையால் கிராமங்களில் இருமடங்கு துன்பம் உண்டாகிவிட்டது. சாந்தியும் நடு நடுவில் அதைக் கேள்விப்பட்டுக்கொண்டுதான் இருந்தாள்; ஆனால் அதைத் தன் புருஷனிடம் சொல்ல அவளுக்குத் தைரியம் உண்டாகவில்லை.

எட்டாம் அத்தியாயம்

கல்கத்தா மாளிகையில் இப்போது விரஜ பாபுவுக்குப் பதிலாக சிவசந்திரன் எஜமானன். மாதவிக்குப் பதிலாக புது நாட்டுப் பெண் எஜமானி. மாதவி இன்னமும் அங்கேயே இருக்கிருள். அண்ணன் அவளிடம் முன் போலவே அன்பாகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ளுகிருன். ஆனுல் அவளுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், காரியஸ்தர்கள் எல்லோருமே இப்பொழுது கூட அவளை 'அக்கா' என்று கூப்பிடுகிருர்கள். ஆனுல் எல்லோருக்கும் பெட்டிச் சாவி கை மாறிவிட்டதென்று தெரியும். ஆனுல் சிவசந்திரனுடைய மனைவி அவளை அலட்சியம் செய்கிருள் என்ருே கௌரவக் குறைவாக நடத்துகிருள் என்ருே சொல்ல முடியாது ; ஆயினும் 'இந்தப் புதிய ஸ்திரீயின் அனுமதி இல்லாமல் நானுக ஒன்றும் செய்யக் கூடாது' என்று மாதவிக்குத் தோன்றும்படி நடந்து கொள்ளுவாள்.

அப்போது தகப்பனுரின் ராஜ்யம், இப்போது அண்ணுவின் ராஜ்யம். ஆகையால் கொஞ்சம் வித்தியாசம் உண்டாகிவிட்டது. 'அப்போது அவளுக்கு மரியாதை உண்டு. இப்போது மரியாதை இருந்தாலும் நினைவுகள் நிறைவேற வழியில்லை. அப்போது அப்பா அவளுக்குச் சர்வாதிகாரங்களும் கொடுத்திருந்தார். இப்போது அவள் உறவினர்களில் ஒருத்தி போலத்தான்.

இப்படிச் சொல்லுவதால் நாம் சிவசந்திரனை நேரடியாகக் குறை கூருமல் மறைவாகப் பழிப்பதாக யாராவது நினைத்துக்கொண்டால், அவர்கள் நம்முடைய கருத்தைச் சரிவர உணரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். உலகம் தோன்றின நாள் முதற்கொண்டு இருந்து வரும் பழக்க வழக்கங்களைத்தான் நாம் குறிப்பிடுகிருேம். மாதவி பாவம் செய்தவள்; நாதி இல்லாதவள் என்பதற்காகத் தங்களுடைய அதிகாரத்தைக் கைவிட யாருக்கு மனசு வரும்? புருஷனின் சொத்தில் பெண்டாட்டிக்குப் பங்கு உண்டு என்று யாருக்குத் தெரியாது? இந்த விஷயம் சிவசந்திரனின் மனைவிக்கும் தெரிந்ததுதானே? சிவசந்திரன் மாதவியின் சகோதரன். ஆனுல் அவளுக்கும் மாதவிக்கும் என்ன சம்பந்தம்? பிறருக்காக அவள் தன் உரிமையை இழந்துவிட வேண்டும் என்று தலையெழுத்தா? மாதவிக்கு எல்லாம் தெரியும். நாட்டுப்பெண் சின்னவளாக இருந்தபோது, விரஜ பாபு உயிரோடிருந்த சமயம். மாதவிக்கு நாட்டுப் பெண்ணும் பிரமீளாவும் சரிசமானம். ஆனுல் இப்போது காலம் மாறிவிட்டது. அவள் எப்போதுமே ஆத்மாபிமானி; ஆதலால் அவள் எல்லோருக்கும் கீழே இருக்க வேண்டியதாக இருக்கிறது! அவளுக்குப் பேச்சைச் சகித்துக்கொள்ளும் சக்தி இல்லை; ஆதலால் அவள் ஒன்றும் பேசுவதில்லை! அதிகாரம் இல்லாத இடத்திலே நிமிர்ந்து நிற்க அவளால் முடியாது; மனசில் ஏதோ வேதனை உண்டாஞல் அதை அவள் மௌனமாகப் பொறுத்துக்கொண்டு விடுவாள். சிவசந்திரனிடம் ஒன்றும் சொல்லிக்கொண்டிருக்க மாட்டாள். தன்மீது அன்புள்ளவன் என்பதற்காக அவ

னுடைய உதவியை நாடுவது அவளுடைய வழக்கத்திற்கு விரோதம். தனக்குச் சொந்தக்காரன் என்பதற்காக அவன் வீட்டில் அதிகாரம் செலுத்த அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. சாதாரண ஸ்திரீகளைப் போலச் சண்டை சச்சரவு செய்யவும் அவளுக்குப் பிடிக்காது.

ஒரு நாள் அவள் சிவசந்திரனைக் கூப்பிட்டு, ‘அண்ணா, நான் புக்ககம் போகிறேன்’ என்றாள்.

‘ஏன் மாதவி? அங்கே ஒருவருமே இல்லையே!’ என்றான் சிவசந்திரன் ஆச்சரியம் அடைந்து.

மாதவி இறந்துபோன தன் கணவரைக் குறிப்பிட்டுக் கூறினாள்: ‘அவருடைய சின்ன மருமகன் காசியிலே நாத்தனாரோடு இருக்கிறான். அவனைக் கூட்டிக்கொண்டு போய் கோலா கிராமத்தில் சுகமாக வசிக்கிறேன்.’

பப்னா ஜில்லாவின் கோலா கிராமத்தில்தான் மாதவியின் புக்ககம். சிவசந்திரன் கொஞ்சம் சிரித்துக்கொண்டே சொன்னான், ‘அங்கே உனக்குக் கஷ்டமாக இருக்காதா, மாதவி?’

‘கஷ்டம் ஏன், அண்ணா? அங்கே இருக்கிற வீடு இன்னமும் அப்படியே இருக்கிறது. பத்துப் பதினைந்து பீகா நிலமும் இருக்கிறது. ஒரு கைம் பெண்ணுக்கு இது போதாதா?’

‘போதாது என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் மாதவி, அங்கே உனக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கும்.’

‘கஷ்டம் ஒன்றும் இல்லை.’

சிவசந்திரன் கொஞ்சம் யோசனை செய்து, ‘ஆனால் நீ ஏன் அங்கே போக வேண்டும்? என்ன

நடந்தது என்று நிஜத்தைச் சொல்லு. நான் சண்டை எல்லாம் தீர்த்து வைக்கிறேன்' என்று சொன்னுன்.

இதற்கு முன் அவன் மனைவி மாதவிக்கு விரோத மாக ஏதோ புகார் செய்தாள் போலிருக்கிறது. அது இப்பொழுது ஞாபகம் வரவே இப்படிச் சொல்லி விட்டான் போலும். ஆனால் மாதவியின் முகம் வெட் கத்தால் சிவந்துவிட்டது.

'நான் சண்டை போட்டுக்கொண்டு உன்னு டைய வீட்டை விட்டுப் போவேன் என்று நீ நினைக் கிருயா?'

சிவசந்திரனும் வெட்கிப் போய்விட்டான். சட்டென்று சொன்னுன்: 'இல்லை, இல்லை; நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் இந்த வீடு எப் போதும் உன்னுடையதுதான். அப்படி இருக்க இன்று ஏன் போகவேணும் என்கிருய்?'

அப்போது இருவருக்கும் ஏககாலத்தில் தங்களு டைய அன்புள்ள தகப்பனாரின் ஞாபகம் வந்தது. இருவருடைய கண்களிலும் நீர் தோன்றத் துவங்கி யது. மாதவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சொன்னுள்: 'நான் மறுபடியும் உன் மகனுக்குப் பூணூல் போடும் சமயம் வருகிறேன்; இப்போது போகிறேன்.'

'பூணூல் போடும் போதா? இன்னும் பத்துப் பன்னிரண்டு வருஷம் கழித்தல்லவா அது?'

'அது வரை உயிரோடிருந்தால் கட்டாயம் வரு கிறேன்.'

என்ன சொல்லியும் மாதவி அங்கே இருக்கச் சம் மதிக்கவில்லை. பயணத்திற்காக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தாள். அவள் புது நாட்டுப் பெண்ணைக்

கூப்பிட்டு வீட்டு விஷயங்களை யெல்லாம் விளக்கமாகச் சொன்னாள். வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளை யும் கூப்பிட்டு ஆசி கூறினாள்.

பயணத்தன்று சிவசந்திரன் கண்ணீரும் கம்பலையு மாகத் தங்கை அருகில் வந்து, 'மாதவி! உன் தமை யன் உன்னை ஒன்றும் தாழ்வாகச் சொல்லவில்லையே?' என்று கேட்டான்.

'ஏன் இப்படிக் கேட்கிறாய், அண்ணா?'

'இல்லை, ஏதாவது கெட்ட வேளையில் வாயி லிருந்து அஜாக்கிரதையாக ஏதாவது வெளிப்பட் டிருந்தால்—'

'சீச்சீ!'

'நிஜம்தானா?'

'ஆம், நிஜம்தான்.'

'அப்படியானால் போ; நீ உன் வீட்டுக்குப் போவதை நான் தடுக்கவில்லை. உனக்கு எங்கே இருக்கப் பிடிக்கிறதோ அங்கே இரு. ஆனால் அடிக் கடி தகவல் தெரிவிக்க மறந்துவிடாதே.'

மாதவி நேராகக் காசிக்குப் போனாள். மரு மகனைக் கூட்டிக்கொண்டு கோலா கிராமத்தில் தன் கணவருடைய வீட்டில் ஏழு வருஷங்களுக்குப் பிறகு காலடி எடுத்து வைத்தாள்.

அவள் வந்ததும் ஸ்ரீமான் சட்டர்ஜீக்குச் சங்கட மாகிவிட்டது. அவரும் யோகேந்திர நாதனின் தகப் பனாரும் நெருங்கிய நண்பர்கள். ஆதலால் சாகும் தறு வாயில் யோகேந்திரன் தன் நிலபுலங்களை யெல்லாம் அவரிடமே ஒப்படைத்துவிட்டுச் செத்தான். அவன் உயிரோடிருந்த போதும் அவர்தான் நிலங்களைக் கவ னித்துக்கொண்டிருந்தார்; யோகேந்திரன் அவை

களைப் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. மாமனாரிடம் நிறையப் பணம் இருந்ததால் தன் தகப்பனாருடைய கொஞ்சச் சொத்து அவனுக்குப் பிரமாதமாகப் படவில்லை. பிறகு அவன் இறந்ததும் சட்டர்ஜீ நியாயமான உரிமையோடு எவ்விதத் தடையும் இல்லாமல் அந்தச் சொத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருந்தார். இவ்வளவு நாள் கழித்து மாதவி திடீர் என்று குறுக்கிட்டதும் சட்டர்ஜீக்கு மிகவும் கவலையாகிவிட்டது. அவள் பொறாமையால்தான் இப்படிச் செய்தாள் என்று அவருக்கு நம்பிக்கை உண்டாகிவிட்டது. ஆகவே மிகவும் கோபமாக வந்து, 'பஹு, இங்கே பார்! இருந்த இரண்டு பீகா நிலத்துக்குப் பத்து வருஷக் கிஸ்தி வட்டி சேர்த்து நூறு ரூபாய் பாக்கி இருக்கிறது. அதைத் தராவிட்டால் உன்னுடைய நிலம் ஏலத்தில் போய்விடும்' என்று சொன்னார்.

மாதவி தன் சந்தோஷ குமாரன் மூலம், 'ரூபாயைப் பற்றிக் கவலைஇல்லை,' என்று சொல்லி உடனே நூறு ரூபாயையும் கொடுத்தனுப்பினாள். அந்த ரூபாய்கள் சட்டர்ஜீக்கு வேறு விதத்தில் உபயோகப்பட்டன.

ஆனால் மாதவி இத்துடன் லேசில் விடவில்லை. அவள் மறுபடியும் சந்தோஷ குமாரனை அனுப்பி, 'என் மாமனார் ரெண்டு பீகா நிலத்திலா ஜீவனம் நடத்தினார்? பாக்கி நில புலங்கள் எங்கே, யாரிடம் இருக்கின்றன?' என்று கேட்டு வரச் சொன்னாள்.

சட்டர்ஜீக்கு கோபம் கோபமாக வந்துவிட்டது. ஏதோ கொஞ்சம் மிச்சம். எட்டு வருஷம் பத்து வருஷம் ஜமீன்தாருக்குக் கிஸ்தி கட்டாவிட்டால் நிலம் எப்படித் தக்கும்?

'நிலத்திலிருந்து வரும்படி ஒன்றுமே இல்லையா? அதிலிருந்து நிலவரி ஏன் கட்டப்படாது? நிஜமாகவே விற்ருச்சு என்ருல் அதை எவன் எவனிடம் விற்ருன் என்று சொல்லுங்கள்; எல்லாம் தெரிந்துகொண்டு வாங்கினவனைக் கிளப்பவேணும். அதுக்குப் பத்திரம் எல்லாம் எங்கே?'

சட்டர்ஜீ ஏதோ பதில் கொடுத்தார்; ஆனால் மாதவிக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் ரொம்ப நேரம் வரை பிராமண தேவதை ஏதேதோ உளறிக் கொண்டிருந்தார். அப்புறம் நெற்றியில் திலகம் இட்டு, மூலைக் கச்சத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு லாலதா கிராமத்துக் கச்சேரிக்குப் புறப்பட்டார். அந்தக் கிராமத்தில்தான் சுரேந்திரனின் வீடும் மதுரா பாபுவின் ஆபீஸும் இருந்தன. பிராமணர் பத்துப் பன்னிரண்டு குரோச தூரம் நடந்து சென்று, மதுரா பாபுவிடம் அழுதுகொண்டே, 'சர்க்கார்தான் காப்பாற்ற வேணும்! இல்லாவிட்டால் ஏழைப் பார்ப்பான் தெருத் தெருவாய் அலைய வேண்டியதாகிவிடும்—' என்று ஆரம்பித்தார் தம் கதையை.

'இப்படி எத்தனையோ பேர்வழிகள் வருகிருர்கள்!' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டே மதுரா பாபு கேட்டார்: 'என்ன விசேஷம்?'

'அண்ணு, என்னைக் காப்பாற்றுங்கள்!'

'விஷயத்தைச் சொல்லுங்காணும்!'

உடனே விது சட்டர்ஜீ மாதவியிடம் வாங்கிய நூறு ரூபாயை மதுரா பாபுவின் கையில் தக்ஷிணையாக வைத்து, 'நீங்கள் தர்மாவதாரம்! நீங்கள் ஒத்தாசை செய்யாவிட்டால் நான் நிர்மூலமாகப் போய் விடுவேன்' என்ருர்.

'சரி, விஷயத்தைப் புரியும்படி சொல்லும்.'

'கோலா கிராமத்தின் ராமதனு ஸன்யாலுடைய விதவை நாட்டுப் பெண் எங்கேயிருந்தோ வந்து என் நிலங்களை அபகரிக்கப் பார்க்கிருள்!'

பிறகு அந்தண தேவதை மானேஜரின் கையைப் பிடித்துக்கொண்டு, 'நான்தான் சர்க்காருக்குப் பத்து வருஷமாக வரி கொடுக்கிறேன்' என்று சொன்ஞர்.

'நீர்தானே பயிர்ச் செலவு செய்கிறீர்? நீர்தானே வரி கொடுக்க வேணும்?'

'சர்க்கார் தயவு பண்ணவேணும்.'

மதுரா பாபுவுக்கு அவருடைய நினைவு தெரிந்துவிட்டது.

'விதவையை ஏய்க்கப் பார்க்கிறீரா?'

பிராமணர் பேசவில்லை.

'எத்தனை பீகா நிலம்?'

'இருபத்தஞ்சு.'

மதுரா நாதர் கணக்குப் போட்டுச் சொன்ஞர். 'குறைந்த பட்சம் மூவாயிரம் ரூபாயாவது ஆகும். ஜமீன்தாருடைய கச்சேரிக்கு என்ன மரியாதை செய்வீர்?'

'உத்தரவுப்படி செய்கிறேன்—முந்நூறு ரூபாய்.'

'முந்நூறு கொடுத்து மூவாயிரம் அடிப்பீராக்கும்! போமையா, நம்மால் ஒன்றும் செய்யமுடியாது.'

பிராமணர் வரண்ட சிரிப்புச் சிரித்துக் கொண்டே, 'எவ்வளவுக்கு உத்தரவிடுகிறீர்கள்?' என்று கேட்டார்.

'ஆயிரம் கொடுக்க முடியுமா?'

பிறகு அதிகமான பேரம் நடந்தது. அதன் பலனுக யோகேந்திரனுடைய விதவைமீது பத்து வருஷத்து

வரி பாக்கி அசலும் வட்டியும் சேர்த்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு பிராது கொடுக்கப்பட்டது. 'ஸம்மன்' வந்தது என்னவோ வாஸ்தவம்; ஆனால் அது மாதவியிடம் வரவில்லை. பிறகு 'டிக்கிரி' ஆயிற்று. அப்புறம் ஒன்றரை மாசம் கழித்து ஜமீன் தாரிடமிருந்து நிலத்தை ஏலம் போடக் கட்டளை வந்தது. பின்னர் அவளுடைய நிலம் எல்லாம் ஜப்தி ஆகி விட்டது.

மாதவி பக்கத்து வீட்டுக்காரியிடம், 'இது கொள்ளைக்காரர்கள் தேசமா?' என்று கேட்டாள்.

'ஏன், என்ன விஷயம்?'

'இல்லாவிட்டால் வேறே என்ன? ஒரு மனுஷன் என்னை ஏமாற்றி என்னுடைய சொத்தை எல்லாம் கொள்ளையடிக்கிறுன்; உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையா?'

'நாங்கள் என்ன செய்ய முடியும்? ஜமீன்தார் பார்த்து ஏலம் போடும்போது ஏழைகளான நாங்கள் என்ன செய்ய முடியும்?'

'சரி; ஆனுல் என் வீடு ஏலம் போடப்படும் விஷயம் எனக்கே தெரிவிக்காமல் இருப்பதா? அப்பேர்ப் பட்ட ஜமீன்தார் யார்?'

அந்த ஸ்திரீ விவரமாக ஜமீன்தாரை வருணிக்க ஆரம்பித்தாள்; 'இந்த மாதிரிக் கொடுமை செய்கிற ஜமீன்தாரைப் பார்த்ததும் இல்லை, கேட்டதும் இல்லை—,' என்று அவள் தான் கேட்டதை எல்லாம் சொன்னுள்.

மாதவி பயந்துகொண்டே கேட்டாள்: 'ஜமீன் தாரையே நேரில் போய்ப் பார்த்தால் காரியம் நடக்குமா?'

தன் மருமகனுக்காக அப்படிச் செய்யவும் அவள் தயாராக இருந்தாள். அந்த ஸ்திரீ மறுநாள் தன் மகனிடம் விவரமாகக் கேட்டுச் சொல்லுவதாகக் கூறி விட்டாள். அவள் மகன் அடிக்கடி லாலதா கிராமத்துக்குப் போவான். அவனுக்கு ஜமீன்தாரின் விஷயம் எல்லாம் தெரியும்; அன்று தோட்டத்தில் நடந்த ஏலோகேசி சம்பவம்கூடத் தெரியும்.

ராமதனுவின் விதவை நாட்டுப் பெண் ஜமீன்தாரை நேரில் போய்ப் பார்க்கலாமா என்று கேட்டதும் அவன் கம்பீரமாகக் கேட்டான்:

'இந்த விதவைக்கு என்ன வயசு?'

'இருபது இருபத்தொண்ணு இருக்கும்.'

'அழகாக இருப்பாளா?'

'தெய்வ கன்னிகை போல இருப்பாள்—'

'உம்—அவரைப் போய்ப் பார்த்தால் காரியம் நடந்துவிடும் — ஆனல், இன்றைக்கு ராத்திரியே அவள் ஒரு படகை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு பிறந்தகம் போய்விட்டால் தேவலை.'

'ஏன்?'

'அவள் தேவ கன்னிகைபோல இருக்கிருள் என்று சொன்னுயே, அதற்காக—'

'அதனுல் என்ன?'

'அதனுல்தான் எல்லாம்; பார்ப்பதற்கு அழகாக இருப்பதால் அவள் ஜமீன்தாரை அண்டக்கூடாது.'

'சீ, போடா!'

'ஆமாம்; தேசம் முழுதும் தெரிந்த விஷயம் ஆச்சே!'

'அப்படியானுல் அவரைப் பார்க்கப் போவது சரியில்லை என்கிருயா?'

'ஆமாம்.'

'அப்படியானால் அவளுடைய ஆஸ்தி போக வேண்டியதுதானா?'

'சட்டர்ஜீ இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றால் ஆஸ்தி திரும்புவது கஷ்டம்தான். அவள் நல்ல வீட்டுப் பெண் என்கிறாய். சொத்தோடு தர்மத்தையும் இழப்பதா?'

மறுநாள் அந்த ஸ்திரீ மாதவியிடம் எல்லா விஷயங்களையும் சொன்னாள். மாதவிக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. நாள் முழுவதும் ஜமீன்தார் சுரேந்திர நாதரைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தாள்.

'சுரேந்திரநாதர்! இந்தப் பெயர் எனக்குத் தெரிந்தது போல் இருக்கிறதே!......ஆனால் அந்த மனுஷருக்கும் இவருக்கும் எவ்வித ஒற்றுமையும் காணோமே!' அந்தப் பெயரை அவள் பல தடவை மனத்திற்குள் உச்சரித்த காலமும் உண்டு. ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன! அவள் அதை மறந்துவிட்டாள்; இப்போது திடீரென்று ஞாபகம் வந்துவிட்டது.

கனவும் தூக்கமுமாக அன்று இரவு எப்படியோ கழிந்தது. பல தடவை பழைய சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன. பல முறை கண்ணீர் விட்டாள். சந்தோஷ குமாரன் அவளுடைய முகத்தைப் பயத்துடன் பார்த்துக்கொண்டே, 'அத்தை, நான் அம்மாவிடம் போகிறேன்' என்று சொன்னான்.

மாதவியே அப்படிப் பலமுறை யோசித்தது உண்டு. இங்கிருக்க வழி இல்லாவிட்டால் காசிவாசம்தானே செய்ய வேண்டும்? சந்தோஷ குமாரனுக்காகத்தான் அவள் ஜமீன்தாரைப் பார்க்க

யோசித்தது. ஆனால் அப்படிச் செய்ய வேண்டாம் என்று அண்டை அயலில் உள்ளவர்கள் தடுத்தார்கள். அதைத் தவிர, அவள் எங்கே போனாலும் இன்னொரு தகராறு இருந்துகொண்டே யிருக்கும்; அவளுடைய அழகும், இளமையும்! இந்த உபத்திரவம் எல்லாம் இப்போது ஏதுக்கு என்று அவள் தன்னையே நொந்துகொண்டாள். ஏழு வருஷமாக அவள் இதை எல்லாம் கவனிக்கவில்லை. புருஷன் இறந்து அவள் தன் தந்தை வீட்டுக்கு வந்ததும் அவள் எல்லோருக்கும் 'அக்கா', 'அம்மா' ஆகிவிட்டாள். இந்தக் கௌரவமான சம்போதனங்களால் அவளுடைய மனம் கிழடுதட்டிப் போய்விட்டது! அழகாவது, இளமையாவது! அப்போது அவைகளைப் பற்றி யோசிக்க அவளுக்கு நேரம் இல்லை. அவள் 'அக்கா'; கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டியவள் 'அக்கா' அல்லவா? ஆனால் இப்போது அவை ஞாபகத்திற்குவந்துவிட்டன. கவலையும் உண்டாகிவிட்டது. அதுவும் அந்த இளமையைப் பற்றின பேச்சு! வெட்கத்துடன் வரண்ட சிரிப்புச் சிரித்து, 'இங்கே இருப்பவர்கள் எல்லாரும் மிருகங்களா?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். ஆனால் அவளுடைய நினைவு தவறு; அவளைப் போலவே எல்லோருடைய மனசும் இருபத்தோராவது வயதிலேயே கிழடாகி விடுமா, என்ன!

மூன்று நாள் கழித்து ஜமீன்தார் புதிதாக ஒரு புகழைச் சம்பாதித்துவிட்டார் என்ற செய்தி கிராமத்தில் பரவியது. உடனே அவள் சந்தோஷ குமாரனின் கையைப் பிடித்துக்கொண்டு, வேலைக்காரியை முன்னால் அனுப்பி, ஒரு படகில் ஏறி உட்கார்ந்தாள்.

வீட்டுக்குப் பக்கத்திலேயே ஆறு. படகோட்டி யிடம், 'சோமாபுரம் போகவேணும்,' என்று சொன்னாள்.

சோமாபுரத்தில் பிரமீளாவின் புக்ககம் இருந்தது. கோலா கிராமத்திலிருந்து பதினைந்து குரோச தூரம். பிரமீளாவை ஒரு முறை பார்த்துவிட்டுப் போகலாம் என்று மாதவிக்கு ஆசை.

பொழுது விடிந்ததும் படகு புறப்பட்டது. நீரோட்டத்தின் போக்கோடு படகு சென்றது. காற்று அனுகூலமாக இல்லாததால் படகு மூங்கில் புதர்களின் நடுவிலும், முள் மரங்களின் அருகிலும் தட்டித் தடவிச் சென்றது. சந்தோஷ குமாரனுக்குப் பரமானந்தம்; படகிலிருந்தபடியே மரங்களின் இலைகளைப் பறித்தெறிந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்.

'காற்று நிற்காவிட்டால் நாளை மதியத்தில் தான் சோமாபுரம் போக முடியும்' என்றார்கள் படகோட்டிகள்.

அன்று மாதவிக்கு ஏகாதசி விரதம். ஆனால் சந்தோஷ குமாரனுக்காகப் படகை எங்காவது நிறுத்தி, சமைத்துப் போடவேணும். படகோட்டிகள், 'திஸ்தேபாடாவின் கடைவீதியில் படகைக் கட்டிவிட்டால் சௌகரியம்; அங்கே எல்லாச் சாமானும் கிடைக்கும்' என்றார்கள்.

'சரி அண்ணே! பையனுக்கு எப்படியாவது பத்துப் பதினொரு மணிக்குள்ளே சாப்பாடு கிடைக்கும்படி செய்' என்று வேலைக்காரி ஒரு படகோட்டியிடம் வேண்டிக்கொண்டாள்.

ஒன்பதாம் அத்தியாயம்

கார்த்திகை மாதம் முடிவுறும் சமயம். கொஞ்சம் கொஞ்சம் பனி பெய்ய ஆரம்பித்துவிட்டது. சுரேந்திரனுடைய மேலறையின் ஜன்னல் மூலம் உள்ளே போகும் சூரியனின் பிரகாசம் பார்ப்பதற்கு இனிமையாகத் தென்படுகிறது. ஜன்னலருகிலேயே பல பெரிய கணக்குப் புஸ்தகங்களையும் காகிதக் கட்டுகளையும் வைத்துக்கொண்டு மேஜையின் ஒரு புறத்தில் அவன் உட்கார்ந்திருந்தான். நிலுவை, கடன், வசூல், வரவு செலவு, கேஸ் விஷயம் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்தான். சும்மா உட்கார்ந்திருந்தால் பொழுது போகவேண்டாமா? ஆனால் அதையும் செய்யக்கூடாதென்று தடுத்தாள் சாந்தி; அதனால் உடம்புக் கோளாறு அதிகமாகிவிட்டால் என்ன செய்வது என்பது அவளுடைய கவலை. ஆனால் எழுத்துக்களைப் பார்ப்பதால் மார்புவலி ஒன்றும் அதிகமாகி விடாது என்று அவளுக்கு ரொம்பப் புத்தி சொன்னதன் பேரில், அவள் ஒப்புக்கொண்டு, வேண்டிய சமயத்தில் அவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தாள்.

இப்போது அவளுடைய ராஜ்யம்தான். அவள் சொல்லும் எந்த வார்த்தையையும் அவன் தட்டுவதில்லை. நாலைந்து ஷோக் பேர்வழிகள் கூடிக்கொண்டு சாந்திக்குச் சில நாளாகக் கொஞ்சம் துன்பமளித்துக் கொண்டிருந்தார்கள். மனைவியின் கட்டளைப்படி சுரேந்திரன் வெளியில் கிளம்புவதே யில்லை. டாக்ட

ரின் யோசனையைச சரியாக நிறைவேற்ற வேண்டும் என்று அவள் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தாள்.

கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் அவள் சிவப்பு நூலால் கடுதாசிக் கட்டுகளைக் கட்டிக்கொண் டிருந் தாள். சுரேந்திரன் ஏதோ காகிதம் பார்த்துக்கொண் டிருந்தவன் நிமிர்ந்து, 'சாந்தி! சாந்தி!' என்று கூப்பிட்டான்.

அவள் எங்கோ போயிருந்தாள்; கொஞ்ச நேரத் தில் திரும்பி வந்து, 'ஏன், கூப்பிட்டீர்களா?' என்று கேட்டாள்.

'ஆம், கொஞ்சம் ஆபீஸுக்குப் போகவேணும்.'

'வேண்டாம்; வேண்டியதைச் சொல்லுங்கள்; நான் கொண்டுவந்து தருகிறேன்.'

'ஒன்றும் வேண்டியதில்லை; கொஞ்சம் மதுரா பாபுவோடு பேசவேணும்.'

'அவரை இங்கே கூப்பிட்டனுப்புகிறேன். நீங் கள் போகவேண்டாம். ஆனால் இப்போது அவர் ஏதுக்கு?'

'அடுத்த மாசத்திலிருந்து அவர் வேலைக்கு வேண் டாம் என்று சொல்லவேணும்.'

சாந்திக்கு ஆச்சரியமாக இருந்தது; கொஞ்சம் சந்தோஷமும் உண்டாயிற்று. 'ஆனால் அவர் என்ன குற்றம் செய்துவிட்டார்?' என்று கேட்டாள்.

'குற்றமா! ரொம்ப அதிகப் பிரசங்கித்தனம் செய்கிறார்!'

பிறகு ஒரு கோர்ட் சர்ட்டிபிகேட்டையும், பல கடுதாசிகளையும் காட்டி, 'இங்கே பார்! கோலா கிரா மத்து விதவை ஒருத்தியுடைய வீடு வாசலையெல்லாம்

ஏலம் போட்டு வாங்கியிருக்கிறார். என்னிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை!' என்று சொன்னான்.

'ஐயோ பாவம்! விதவையின் வீடு வாசலை ஏலம் போடலாமா? ஆனால் ஏன் அதை விற்க வேணும்?'

'பத்து வருஷத்து வரி பாக்கியாம். அதுக்கு அசலும் வட்டியும் சேர்த்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குப் பிராது!'

ரூபாய் என்றதும் சாந்தி கொஞ்சம் சாந்த மடைந்தாள். மெல்லச் சிரித்துக்கொண்டே, 'அதில் மானேஜர் மேலே என்ன குற்றம்? அவர் இத்தனை ரூபாயை விட்டுவிடுவதா?' என்றாள்.

சுரேந்திரன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து பதிலளிக்கவில்லை. சாந்தி மறுபடியும் கேட்டாள்: 'இத்தனை ரூபாயை விட்டுவிடுவதா?'

'விடவேண்டாம்; ஒரு விதவையை வீட்டை விட்டுத் துரத்தலாமா? என்ன நினைப்பு உனக்கு!'

அந்தப் பேச்சில் மறைந்திருந்த ஜ்வாலை அவளைப் பொசுக்கியது. அவள் வருத்தமடைந்து, 'இல்லை, வீட்டைவிட்டுத் துரத்தச் சொல்லவில்லை. உங்களுடைய பணத்தை எல்லாம் நீங்கள் தானம் செய்தால் அதை நான் ஏன் தடுக்கவேணும்?' என்றாள்.

சுரேந்திரன் சிரித்துக்கொண்டே, 'சாந்தி, நான் அதுக்காகச் சொல்ல வரவில்லை. என் ரூபாய் உன்னுடையது இல்லையா? ஆனால், நான் போய்விட்டால்—' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

'சீ! என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்?'

'எனக்கு இஷ்டமான வேலையை நீ செய்வாயல்லவா?'

புருஷனின் உடம்பு சரியாக இல்லாததால் சாந்தி யின் கண்களில் நீர் நிறைந்தது.

'ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்?' என்று அவள் கேட்டாள்.

'எனக்குப் பிடிக்கிறது, பேசுகிறேன். சாந்தி! நீ என்னுடைய ஆசைகளை, ஆவல்களைத் தெரிந்து வைத்துக்கொள்கிருயா?'

சாந்தி தன் கண்கள் மேல் முந்தானையை வைத் துக்கொண்டு தலையை ஆட்டினுள்.

கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் சுரேந் திரன், 'இதுதான் என் அக்காவின் பெயர்!' என்ருன்.

முந்தானையை எடுத்துவிட்டு, அவனைப் பார்த் தாள் சாந்தி. சுரேந்திரன் ஒரு கடிதத்தைக் காட்டி, 'இதோ பார், என்னுடைய அக்கா பெயர்!' என்ருன்.

'எது?'

'இதோ பார்; "மாதவி தேவி!"—அவளுடைய வீட்டைத்தான் ஏலம் போட்டிருக்கிருர்கள்.'

ஒரு விஞடியில் சாந்திக்கு எல்லாம் தெரிந்து விட்டது.

'அதனுல்தானு எல்லாவற்றையும் திருப்பிக் கொடுக்கவேணும் என்கிறீர்கள்?'

'ஆம், அதனுல்தான். கட்டாயம் எல்லாம் திருப் பிக் கொடுத்துவிடுவேன்; எல்லாம்! எல்லாம்!'

மாதவியின் பெயரைக் கேட்டதும் சாந்திக்குக் கொஞ்சம் துக்கம் உண்டாகிவிட்டது. அவளுக்கு 'அக்கா' மீது பொருமை உண்டாகிவிட்டது போல் தோன்றியது.

'அவள் உங்களுடைய "அக்கா"வாக இல்லாமல் வேறு யாராவது இருக்கலாம். "மாதவி" என்று எத்தனையோ பேர் இருப்பார்கள்! பெயருக்காக—'

'அக்காவின் பெயருக்கு நான் மரியாதை காட்ட வேண்டாமா?'

'நன்றாகச் செய்யுங்கள்! ஆனால் அவளுக்கு ஒன்றும் தெரியாது.'

'அவளுக்குத் தெரியாவிட்டால் போகட்டும். ஆனால் நான் அதை அகௌரவப்படுத்த முடியுமா?'

'எத்தனையோ பேருக்கு "மாதவி" என்று பெயர் இருக்கிறது.'

'துர்க்கையின் பெயரை எழுதி அதன்மேலே நீ காலை வைப்பாயா?'

'சீச்சீ! தெய்வத்தின் பெயர் எழுதி—'

சுரேந்திரன் சிரித்துவிட்டான். 'சரி, தெய்வத்தின் பெயர் வேண்டாம். ஆனால் ஐயாயிரம் ரூபாய் தருகிறேன்; ஒரு வேலை செய்வாயா?'

'என்னது?' என்றாள் அவள் சந்தோஷமாக.

சுவரில் சுரேந்திரனுடைய படம் ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அதைக் காட்டி அவன் சொன்னான்: 'இந்தப் படத்தை—'

'என்ன!'

'நாலு பிராமணர்களிடம் கொடுத்து தூக்கிக் கொண்டு போய் ஆற்றங்கரையில் எரிக்கச் சொல்ல உன்னால்—'

அருகிலேயே எங்காவது இடி விழுந்துவிட்டால் முதலில் ஒரு வினாடிவரை ரத்தம் உலர்ந்துவிடுவது போலவும், பாம்பால் தீண்டப்பட்ட நோயாளியின் முகம் கறுப்பதைப் போலவும் ஆகிவிட்டது சாந்தி

யின் நிலைமையும். பிறகு அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வு வந்தது; முகத்திலும் கண்களி லும் ரத்தம் பாய்ந்தது. பிறகு பரிதாபமாகப் புருஷ னின் முகத்தைப் பார்த்துக்கொண்டே அவள் கீழே இறங்கிவிட்டாள். புரோகிதரைக் கூப்பிட்டு வேண் டிய பரிகாரம் செய்தாள்; அப்புறம் அக்கா யாராக இருந்தாலும் சரி, அவளைப்பற்றி அவனிடம் ஒன்றும் சொல்லுவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தாள். பிறகு வெகு நேரம்வரை அறையிலேயே கிடந்து அழுதுகொண்டிருந்தாள். இவ்வளவு கடுமையான பேச்சை அவள் தன் ஆயுளில் கேட்டதே இல்லை.

சுரேந்திரன் கொஞ்ச நேரம் பேசாமல் உட்கார்ந் திருந்தான்; பிறகு எழுந்து வெளியே போனான். ஆபீ ஸில் மதுரா பாபுவைச் சந்தித்தான்.

எடுத்தவுடன், ‘கோலா கிராமத்தில் யாருடைய சொத்தை ஏலம் போட்டீர்?’ என்று கேட்டான்.

‘செத்துப்போன ராமதனு ஸன்யாலின் விதவை மருமகளுடைய சொத்தை—’

‘ஏன்?’

‘பத்து வருஷத்து கிஸ்தி பாக்கி—’

‘கணக்கைக் கொண்டு வாருங்கள் பார்க்கலாம்.’

மதுரா பாபு முதலில் வெலவெலத்துப் போய் விட்டார். சமாளித்துக்கொண்டு, ‘கணக்குப் புஸ்தகம் எல்லாம் பப்னாவிலிருந்து இன்னும் வரவில்லையே!’ என்றார்.

‘சரி, அப்படியானால் கணக்கைக் கொண்டுவர ஆளை அனுப்பும். விதவை தங்கியிருக்கக் கொஞ்சங் கூட இடம் விடவில்லையா?’

‘இல்லை என்று தெரிகிறது.’

'அப்படியானால் அவள் எங்கே இருப்பாள்?'

மதுரா பாபு தைரியத்தைத் திரட்டிக்கொண்டு 'இத்தனை நாள் இருந்த இடத்திலேயே—' என்றார்.

'இத்தனை நாள் எங்கே இருந்தாள்?'

'கல்கத்தாவில், அப்பா வீட்டில்.'

'அப்பா பெயர் தெரியுமா?'

'தெரியும்; விரஜலால் லாஹிடீ.'

'விதவையின் பெயர்?'

'மாதவி தேவி.'

தலை குனிந்துகொண்டு அங்கேயே உட்கார்ந்து விட்டான் சுரேந்திரன்.

மதுரா பாபு திடுக்கிட்டு, 'ஏன்? ஏன்?' என்றார்.

அந்தக் கேள்விக்கு சுரேந்திரன் பதில் ஒன்றும் அளிக்கவில்லை. ஒரு வேலையாளைக் கூப்பிட்டு, 'ஒரு நல்ல குதிரைக்குச் சேணம் கட்டிக்கொண்டு வரச் சொல்லு — நான் இப்போதே கோலா கிராமத்துக்குப் போகவேணும். இங்கிருந்து கோலா கிராமம் எவ்வளவு தூரம் தெரியுமா?' என்றான்.

'பத்து குரோசம் இருக்கும்.'

'இப்போது ஒன்பது மணி ஆகிறது. ஒருமணிக்கெல்லாம் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாமா?'

குதிரை வந்ததும் அதன் மேல் ஏறிக்கொண்டு, 'எந்தப் பக்கம்?' என்று கேட்டான்.

'வடக்குப் பக்கம் கொஞ்ச தூரம் போய் மேற்குப் பக்கம் திரும்பவேணும்.'

சவுக்கடி பட்டுப் பாய்ந்தது குதிரை.

இதைப்பற்றிக் கேட்ட சாந்தி, சுவாமி அறையில் தன் தலையை மோதி உடைத்துக்கொண்டாள்.

'சுவாமி! இதுதான் உன் திருவுள்ளமா? அவரை நான் மறுபடியும் அடைய முடியுமா?'

அப்புறம் இரண்டு சேவகர்கள் குதிரை மீதேறிக் கோலா கிராமத்தின் பக்கம் பறந்தார்கள். ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சாந்தி.

'துர்க்கை அம்மா! ஒரு ஜோடி எருமை உனக்குப் பலியிடுகிறேன். என்ன வேணுமோ, செய்கிறேன். அவரை மாத்திரம் திருப்பித் தந்துவிடு. என்னுடைய நெஞ்சைப் பிளந்து உனக்கு ரத்தம் கொடுக்கிறேன், தாயே! உன் தாகம் தணியும் வரை கொடுக்கிறேன்—அவரை மாத்திரம்!'—

* * *

கோலா கிராமம் போய்ச் சேர இன்னும் இரண்டு குரோச தூரம்தான் பாக்கி. குதிரையின் வாயில் நுரை தள்ளி, கடிவாளம் எல்லாம் நனைந்துவிட்டது. வயல் வரப்புக்களை உடைத்துக்கொண்டு, வாய்க்கால்களை எல்லாம் தாண்டிக்கொண்டு, உயிரையே கால்களில் வைத்துக்கொண்டு பறந்துகொண்டிருந்தது குதிரை!

குதிரை மீது உட்கார்ந்திருந்த சுரேந்திரனுக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது; மயக்கம் வரும் போலிருந்தது; உள்நாடியே வெடித்து வெளிவந்துவிடும் போலிருந்தது. பிறகு இருமலோடு வந்து விழுந்தது இரண்டு துளி ரத்தம்! அழுக்குப் படிந்த சட்டையில் அது ஒட்டிக்கொண்டது. அவன் கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

ஒரு மணி ஆவதற்குள்ளேயே அவன் கோலா கிராமத்திற்குப் போய்விட்டான். பாட்டையிலிருந்த ஒரு கடைக்காரனிடம், 'இதுதானு கோலா கிராமம்?' என்று கேட்டான்.

'ஆம்.'

'ராமதனு ஸன்யாலின் வீடு எது?'

'இந்தப் புறம்.'

மறுபடியும் குதிரை பாய்ந்து அந்த வீட்டருகில் சென்றது. வாசலிலேயே ஒரு சேவகன் உட்கார்ந்திருந்தான். யஜமானனைக் கண்டதும் அவன் கும்பிட்டான்.

'வீட்டிலே யார் இருக்கிறார்கள்?'

'ஒருத்தருமில்லை!'

'ஒருத்தருமில்லையா? எங்கே போய்விட்டார்கள்?'

'காலையிலேயே படகிலே ஏறிப் போனார்கள்.'

'எங்கே? எந்த வழியாக?'

'இந்தப் பக்கத்தில்—'

'ஆற்றங்கரையோடு பாதை இருக்கிறதா? குதிரை போக முடியுமா?'

'நிச்சயமாகத் தெரியாது. போகலாம்.'

மறுபடியும் பாய்ந்தது குதிரை. இரண்டு குரோசம் சென்றதும் வழி நின்றுவிட்டது; இனி குதிரை போக முடியாது. குதிரையை விட்டுவிட்டுக் கால் நடையாகப் புறப்பட்டான் சுரேந்திரன். போகும் போது சட்டைமேல் பல துளி ரத்தம் விழுந்திருப்பதை அவன் கண்டான். அப்போதும் அவனுடைய உதடுகளிலிருந்து ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. ஆற்றில் இறங்கி ஒரு கை ஜலம் அள்ளிக் குடித்தான். மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். காலில் செருப்புக் கூட இல்லை. உடம்பு முழுவதும் ஒரே புழுதி; நடு நடுவில் ரத்தக் காயம், மார்பில் யாரோ இரத்தம் தெளித்துவிட்டது போல் இருந்தது.

பகல் மங்க ஆரம்பித்தது. கால்கள் தடுமாற ஆரம்பித்தன. இந்த முறை படுத்தால் ஒரே யடியாகப் படுத்துவிட வேண்டியது போல் ஆகிவிட்டான். ஆகையால்தான் மரணப் படுக்கையில் இந்த வாழ்வின் கடைசியான மகா சாந்தியைப் பெறுவதற்காக அவன் வேகமாக நடக்கிறுன் போலும்! இந்த உடம்பில் இருக்கும் சக்தி எல்லாம் செலவழித்துக் கடைசியில் படுக்கையிலேயே படுத்துவிடுவான்; அப்புறம் எழுவே மாட்டான்.

ஆற்றின் திருப்பத்துக்கு அருகில் அதோ — ஒரு படகு அல்லவா? ஏதோ புல் மண்டின புதரை விலக்கி அது வழி செய்துகொண்டு வருகிறது. சுரேந்திரன் 'அக்கா!' என்று கூவினுன்.

ஆனுல் உலர்ந்த தொண்டையிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. இரண்டு துளி ரத்தம் மாத்திரம் கீழே சிந்தியது.

'அக்கா!'—மறுபடியும் இரண்டு துளி ரத்தம்!

புதர் படகின் போக்கைத் தடுத்துக்கொண்டிருக்கிறது. சுரேந்திரன் அருகில் போய்விட்டான்.

'அக்கா!' என்று மறுபடியும் கூப்பிட்டான்.

நாள் முழுவதும் பட்டினி கிடந்ததாலும், மனக் கஷ்டத்தாலும், மாதவி உயிர் இல்லாதவள் போல், தூங்கிப்போன சந்தோஷ குமாரன் அருகிலேயே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். திடீரென்று யாரோ அவளைக் கூப்பிடும் குரல் கேட்டது; பழைய பழக்கமான குரல்! எழுந்து உட்கார்ந்தாள். உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள்: உடம்பு முழுவதும் ஒரே புழுதியாக — அடே! அவர் 'ஸார்' போல் இருக்கிறதே!

'அடீ, சீக்கிரம் படகைக் கரை அருகில் கொண்டு போகச் சொல்லடீ!'

அப்போது சுரேந்திரன் மெதுவாகக் கீழே விழுந்துகொண்டிருந்தான். எல்லோரும் சேர்ந்து அவனைத் தூக்கி எப்படியோ படகில் கிடத்தினார்கள். முகத்திலும் கண்கள் மீதும் ஜலம் தெளித்தார்கள். ஒரு படகோட்டி அவனை அடையாளம் தெரிந்துகொண்டு, 'இவர் லாலதா கிராமத்து ஜமீன்தார்!' என்றான்.

கழுத்தில் இருந்த பொன்மாலையைத் தாயத்துடன் கழற்றி அவன் கையில் கொடுத்து, மாதவி, 'இன்றைக்கு ராத்திரிக்குள் லாலதா கிராமத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியுமா? அப்படிச் சேர்த்தால் ஒவ்வொருவனுக்கும் ஒரு மாலை தருகிறேன்' என்று சொன்னாள்.

பொன் மாலையைக் கண்டதும் மூன்று பேர் கயிற்றுடன் ஆற்றில் குதித்தார்கள்.

பொழுது சாய்ந்தபின் சுரேந்திரனுக்கு உணர்வு வந்தது. கண்களைத் திறந்து மாதவியின் முகத்தையே அவன் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவளுக்கு 'முசுக்கு' இல்லை. நெற்றியில் கொஞ்சத்தைத்தான் முந்தானை மறைத்திருந்தது. சுரேந்திரனுடைய தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள்.

கொஞ்ச நேரம் கழித்து அவன், 'நீ அக்கா தானே?' என்று கேட்டான்.

முதலில் அவள் ரொம்ப ஜாக்கிரதையாக அவனுடைய உதடுகள்மீது பட்டிருந்த ரத்தத் துளிகளைத் துடைத்தாள்; அப்புறம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'நீ அக்காதானே ?'

'நான் மாதவி !'

அவன் கண்களை மூடிக்கொண்டு, மிருதுவான குரலில், 'ஆம்-ஆம்,' என்றான்.

அந்த மடியிலேயே உலகத்து இன்பம் எல்லாம் நிறைந்திருக்கிறது போலும். இத்தனை நாள் கழித்து அந்த இன்பத்தைத் தேடிப் பிடித்ததால் அவனுடைய அதரங்களிலே புன்சிரிப்புப் படர்ந்தது.—'அக்கா ! ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது.'

சல சல வென்று பட்கு ஓடிக்கொண்டிருக்கிறது. சுரேந்திரனுடைய முகத்தின்மீது நிலவு படர்ந்து கொண்டிருக்கிறது. வேலைக்காரி ஓர் ஒடிந்த விசிறியால் மெதுவாக விசிறிக்கொண்டிருக்கிறாள்.

மறுபடியும் சுரேந்திரன், 'எங்கே போய்க்கொண் டிருந்தாய் ?' என்று கேட்டான்.

தழுதழுத்த குரலில் மாதவி, 'பிரமீளாவின் மாமனார் அகத்துக்கு,' என்றாள்.

'சீ ! அக்கா ! இப்படி யாராவது சம்மந்தி வீட்டுக்குப் போவார்களோ ?'

பத்தாம் அத்தியாயம்

தன்னுடைய மாளிகையின் படுக்கை யறையில் அக்காவின் மடிமீது தலை வைத்துக்கொண்டு மரணப் படுக்கையில் கிடக்கிறான் சுரேந்திரன். அவனுடைய இரண்டு கால்களையும் தன் மடியில் வைத்துக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருக்கிறாள் சாந்தி. பப்னாவிலிருந்த டாக்டர்கள் வைத்தியர்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சித்தும் ரத்தப் பெருக்கைத் தடுக்க முடியவில்லை. ஐந்து வருஷத்துக்கு முன் பட்ட அந்தக் காயம், இப்போது ரத்தம் கக்கிக்கொண்டிருக்கிறது.

மாதவியின் ஹிருதயத்தினுள்ளே என்ன நடக்கிற தென்று சொல்ல முடியாது. நமக்கும் நிச்சயமாகத் தெரியாது. ஐந்து வருஷத்திற்கு முந்தி நடந்த சமாசாரங்கள் அவளுக்கு ஞாபகம் வருகிறதுபோலிருக்கிறது. அவள் அவனை வீட்டை விட்டுக் கிளப்பிவிட்டாள் ; ஆனால் திரும்பக் கொண்டுவரவில்லை ; இப்போது சுரேந்திரனே திரும்பி வந்திருக்கிறான்.

மாலை ஆன பின் பிரகாசமான விளக்கின் வெளிச்சத்தில் சுரேந்திரன் மாதவியின் முகத்தைப் பார்த்தான். கால்களின் அருகில் உட்கார்ந்திருந்த சாந்தி கேட்டுவிடப் போகிறாளே என்று மாதவியின் முகத்தைத் தன் கைகளால் முகத்தருகில் இழுத்து மெதுவாகப் பேசினான்.

‘ அக்கா ! அன்றைக்கு என்னை வீட்டை விட்டுத் துரத்தினாயே, ஞாபகம் இருக்கிறதா ? நான் அதனால்

தான் பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்; உன்னையும் துரத்திவிட்டேன். பழி தீர்ந்துவிட்டதல்லவா?”

ஒரு வினாடிக்குள் மாதவி பேச்சு மூச்சு இல்லாமல், குனிந்த தன் தலையை அவன் தோள்மீது போட்டுவிட்டாள்.

அப்புறம் அவளுக்கு உணர்வு வந்தபோது வீட்டில் ஒரே அழுகை மயமாக இருந்தது.

4092

ஜுபிடர் அச்சுக்கூடம், சென்னை.